a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

அக்டோபர் 2012 October | இதழ் 261 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION



அடி சறுக்குமா?







22 வது ஆண்டு
nd Year

Growing with the Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250

தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

# சுழலும் அரசியல்

கனடிய அரசியல் பல மட்டங்களிலும் மாற்றத்தை வேண்டி நகருகின்றது. பல அதிரடி நடவடிக்கைகள் திடுதிப்பென அங்குமிங்குமாக இடம்பெறுகின்றன.

கடந்த மாதப் பிற்பகுதியில் ஒட்டாவா நாடாளுமன்றத்தில் அதிர்ச்சி வைத்தியமொன்று அரங்கேற்றப்பட்டது. ஆளும் கன்சர்வேடிவ் உறுப்பினர் ஒருவரால் முன்மொழியப்பட்ட தனிப்பட்ட பிரேரணையை அனைவரும் எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென்ற ஸ்டீபன் காப்பரின் முடிவை ஜேசன் கெனி உள்ளாக எட்டு அமைச்சர்கள் உட்பட 87 கன்சர்வேடிவ் உறுப்பினர்கள் ஏற்காது, பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

167 எம். பிக்களைக் கொண்ட கன்சர்வேடிவ் அணியில் 87 என்ற எண்ணிக்கை ஐம்பது வீதத்துக்கும் அதிகமானது. கட்சியின் அடுத்த தலைவர் போட்டிக்கு குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி தயாராகிவிட்டாரென்பது பகிரங்கமாகியுள்ளது.

ஒன்ராறியோ மாகாண முதலமைச்சர் டால்ரன் மக்கன்ரி தமது சிறுபான்மை அரசாங்கத்தைப் பெரும்பான்மையாக்க எடுத்த பலப்பரீட்சை விஷப்பரீட்சையானதால், தமது தலைமைக்கே ஆபத்தை ஏற்படுத்தினார். அடுத்த ஏப்ரலுக்குள் ஒன்ராறியோ அடுத்த தேர்தலைச் சந்திக்கலாமென்று உட்கட்சி வட்டாரங்களிலிருந்து செய்தி கசிகின்றது.

கியுபெக்கில் நடைபெற்ற மாகாணத் தேர்தலில் லிபரல் சரிந்துள்ளது. அதன் தலைவரான ஜான் ஷாறே சொந்தத் தொகுதியில் தோல்வியடைந்ததால் தமது தலைமைப் பதவியைத் துறந்துள்ளார். சுமார் ஒரு தசாப்தத்தின் பின்னர் பிரிவினாவாதக் கட்சியான பார்ட்டி குபெக்கா இங்கு ஆட்சியைக் கைப்பற்றினாலும், சிறுபான்மை அரசாகவே இது அமைந்துள்ளதால் பிரிவினைவாதத்தை உடனடியாக முன்னெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மத்திய லிபரல் கட்சி ஜோன் கிரட்ஷியானுக்குப் பின்னர் நான்கு தலைவர்களைக் கண்டும், நிமிர முடியாமல் தள்ளாடுகின்றது. நாடாளுமன்றத்தில் மூன்றாவது இடத்திலுள்ள லிபரலின் புதிய தலைவர் தெரிவு அடுத்தாண்டு முற்பதியில் நடைபெறவுள்ளது. புகழ்பெற்ற முன்னாள் பிரதமர் ட்ரூடோவின் மகன் ஜஸ்ரின் ட்ரூடோவை தலைவராக்கி, லிபரலுக்கு இளம் இரத்தம் பாய்ச்ச முனைப்புக் காட்டப்படுகின்றது.

ஊடகங்களைப் பகைத்துக்கொண்ட ரொறன்ரோ மேயர் றொப் ஃபோர்ட், தினசரி அவர்களுக்குத் தீனியாகி ஒருவகையில் பிரபல்யமானாலும், பல நெருக்கடிக்குள் சிக்கியுள்ளார். 'விருப்பம் கலந்த முரண்பாடு' தொடர்பான வழக்கின் தீர்ப்பில் இவரின் எதிர்காலம் தங்கியுள்ளது. ஆனைக்கும் அடி சறுக்கலாம் என்று சொல்வார்கள்.

'ஜனநாயகம் என்பது பெரும்பான்மையின் சர்வாதிகாரம்' என்பதை கனடாவில் நாகரிகமாகப் பார்க்க முடிகின்றது.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## 22வது ஆண்டு பூர்த்தி மலருக்கு நவம்பர் 30 வரை படைப்புகள் ஏற்கப்படும்!

கனடியத் தமிழர்களின் அடையாளமாகவும், மூத்த தமிழ் ஊடகமாகவும் மிளிரும் 'தமிழர் தகவல்' 22வது ஆண்டு பூர்த்தி மலர் தயாரிப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளது.

முன்னைய ஆண்டுகளைப்போல, வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவத்தின் போது மலர் வெளியிட்டு வைக்கப்படும்.

வழமையாக எழுதும் சிலரது ஆக்கங்கள் ஏற்கனவே எமக்குக் கிடைத்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரியத் தருகின்றோம்.

கனடிய நாட்டின் வாழ்க்கை முறைக்குத் தேவையான தகவல்கள், அவற்றின் பின்னணி, முக்கியமான சட்ட மாற்றங்கள், கனடியத் தமிழரின் வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட இன்னோரன்ன விடயங்கள், புலம்பெயர் வாழ்வின் அனுபவங்கள் போன்றவைகளை மையமாகக் கொண்டு எழுதப்படும் படைப்புகளுக்கு சிறப்புரிமை வழங்கப்படும்.

தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் எழுதலாம். கட்டுரை அல்லது கவிதை வடிவில் இவைகள் அமைந்திருக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படின் 416 920 9250 இலக்கத்தில் உங்கள் விபரங்களைப் பதிவு செய்தால் தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.

கட்டுரைகள் கிடைக்க வேண்டிய இறுதிநாள் 2012 நவம்பர் 30 வெள்ளிக்கிழமை. கணினியில் அச்சடிக்கப்பட்ட ஆக்கங்களை tamilsinfo@sympatico.ca என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**தபால் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:**
Tamils' Information
P.O.Box - 3, Station - F
Toronto, Ontario.
M4Y 2L4

## அகதிகளுக்கான கதவு மூடப்படுகிறது! இளம் குடிவரவாளருக்குச் சாதகமான புள்ளிகள் வழங்கும் முறை அறிமுகம்!

அகதிகளை வரவேற்று அவர்களுக்கு நல்வாழ்வளித்தமைக்காக ஐ. நா. வின் 'நான்சன் பதக்கம்' பெற்ற கனடா, புதிய புதிய சட்டங்கள் ஊடாக அகதிகள் வருகையைக் குறைத்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

காலக்கிரமத்தில் மூன்றாம் உலக நாடுகளிலிருந்து அகதிகளை ஏற்றுக்கொள்வது முற்றாக நிறுத்தப்படுமோ என்று சந்தேகிக்கும் வகையில் குடிவரவு அகதிகள் சட்டங்களில் பாரிய மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

அகதிகளுக்கான அமைப்புகளும் கனடிய சட்டவாளர்களும் மருத்துவர்களும் இதனைக் கண்டித்து அறிக்கைகளை விடுத்து வருகின்றனராயினும், இவைகள் எதனையும் குடிவரவு அமைச்சு ஏறெடுத்தும் பார்ப்பதாகத் தெரியவில்லை.

மறுபுறத்தில், இளைய குடிவரவாளர்களுக்கு முன்னுரிமையளிக்கும் வகையில் புள்ளி வழங்கும் முறையில் குடிவரவுத் திணைக்களம் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. அடுத்தாண்டில் நடைமுறைக்கு வரவுள்ள இத்திட்டத்தின் கீழ், 18 வயதுக்கும் 35 வயதுக்குமிடைப்பட்டவர்களுக்கு அதற்கென 12 புள்ளிகள் வழங்கப்படும். 35 வயது தாண்டிச் செல்லும் ஒவ்வொரு வயதுக்கும் ஒவ்வொரு புள்ளி குறையும். இதன்படி, 47 வயதானவருக்கு வயதுக்கான புள்ளி பூஜ்யமாகவிருக்கும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும், கல்வித் தகைமைக்கு 25 புள்ளிகள், மொழியாற்றலுக்கு 28 புள்ளிகள், தொழில் அனுபவத்துக்கு 15 புள்ளிகள், கனடாவில் அவருக்கு வேலை வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் 10 புள்ளிகள், மேற்குறிப்பிட்ட வயதெல்லைக்குள்ளிருந்தால் 12 புள்ளிகள், கனடிய வாழ்க்கை நிலைக்கு ஏற்ப மாறக்கூடிதவராக இருந்தால் 10 புள்ளிகள் வழங்கப்படும். இது ஆகக்கூடிய புள்ளிகளென்பதால், நேர்முகப் பரீட்சையில் அதற்கேற்ற வகையில் புள்ளி கிடைக்கும்.

கனடாவின் இரண்டு உத்தியோகபூர்வ மொழிகளிலும் (ஆங்கிலம், பிரெஞ்ச்) சிறந்த திறமையுள்ளவர்களுக்கு (எழுதவும் பேசவும்) மட்டுமே 28 புள்ளிகள் கிடைக்கும். இந்த மொழிகளைப் பேச மட்டும் தெரிந்தவர்கள் ஆகக்கூடியதாக 24 புள்ளிகளையே பெறுவர். அடுத்த வருடத்தில் புதிய திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னரே இதன் சாதக பாதகங்களை அறிய முடியும்.

## பிரஜாவுரிமை மோசடியில் 11,000 பேர் சிக்கியுள்ளனர் முதலில் 3,100 பேர் பிரஜாவுரிமையை இழக்கவுள்ளனர்

மோசடியான வகையில் கனடிய பிரஜாவுரிமையைப் பெற்ற 11,000 பேரை கனடிய குடிவரவு அமைச்சு அடையாளம் கண்டுள்ளது. இவர்களில் முதற்கட்டமாக 3,100 பேரின் பிரஜாவுரிமையை உடனடியாக ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒருவர் கனடிய பிரஜாவுரிமையைப் பெறுவதற்கு கனடாவில் வசித்திருக்க வேண்டிய காலத்தை மோசடியாக மாற்றி பிரஜாவுரிமையைப் பெற்றவர்களே அகப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள். குடிவரவு கவுன்சிலர்களாகக் கடமையாற்றும் குறிப்பிட்ட சிலர் இதற்கு உடந்தையாகவிருந்தமையையும் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். இதனைத் தடுப்பதற்காகச் சில சட்ட மாற்றங்களைக் கொண்டுவர அமைச்சர் ஜேசன் ஜேசன் கெனி நடவடிக்கை எடுத்துள்ளார்.

Minister Jason Kenney said ottawa is contemplating amending the Citizenship Act to require immigration representatives who assist permanent residents in applying for citizenship be members of the regulatory body, Immigration Consultants of Canada Regulatory Council.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ஆசனப்பட்டி அணியாது வாகனம் செலுத்தும் சாரதிகள் மீது பொலிசார் கூடிய கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். விபத்து வேளைகளில் மரணம் அல்லது கடுமையான காயங்களுக்கு ஆசனப்பட்டி அணியாமை முக்கிய காரணமாகக் காணப்பட்டுள்ளது. இதற்கான தண்டம் 200 டாலர்கள். அத்துடன் இரண்டு புள்ளிகளும் இழக்கப்படும் இதற்கும் மேலாக வாகனக் காப்புறுதிக்குச் செலுத்தும் தொகையும் அதிகரிக்கும்.

ரொறன்ரோ நகரின் எல்லைக்குள் வாகனங்களைச் செலுத்துவதற்கான ஆகக்கூடிய வேகத்தை 30 கிலோ மீட்டராக்குவது பற்றி தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் இந்த ஆலோசனையை முன்வைத்துள்ளனர். இது நகரசபையால் ஏற்கப்படும் பட்சத்தில் அடுத்தாண்டின் ஆரம்பத்தில் அமுலுக்கு வரக்கூடும்.

ரொறன்ரோ போக்குவரத்துச் சபையின் (ரி.ரி.சி) கட்டணத்தை அடுத்த ஜனவரியிலிருந்து அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனேகமாக ஐந்து சதமளவில் அதிகரிப்பு ஏற்படலாமென்று தெரியவருகின்றது. அதேசமயம், பேருந்துகள் மற்றும் ரயில்களைச் சுத்தம் செய்யும் பணிகளைத் தனியார் நிறுவனத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

வீடுகளுக்கு முன்புறத்தில் தோய்த்த ஆடை வகைகளை உலர விடுவதைத் தடுப்பதற்கு பிராம்டன் நகரசபை விரும்புகின்றது. கடந்த ஆண்டில் இதற்கான தீர்மானமொன்று மேற்படி நகரசபையில் கொண்டுவரப்பட்ட போதும் அது போதிய வாக்குகள் கிடைக்காமையால் நிராகரிக்கப்பட்டது. நகரத்தினதும் வீடுகளினதும் அழகுக்கு இது தடையாக இருப்பதாகப் புகார்கள் செய்யப்பட்டதே இதற்குக் காரணம்.


கனடிய நாடாளுமன்றத்துக்கு மேலதிகமாக வழங்கப்படவுள்ள முப்பது தொகுதிகளில் பதினைந்து ஒன்ராறியோ மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் தலா இரண்டு தொகுதிகள் ரொறன்ரோ மற்றும் யோர்க் பிரதேசங்களுக்கு கிடைக்கவுள்ளது. ஸ்காபரோ றூஜ்றிவர் தொகுதி இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஸ்காபரோ வடக்கு ஸ்காபரோ கிழக்கு என்றவாறு எல்லைகள் வகுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு கனடாவில் நடத்தப்பட்ட குடிசன மதிப்பீடு குறித்த ஒரு தகவல் பலருக்கும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. தனியாக வசிக்கும் ஆண்கள் பலர் தம்முடன் வசிக்கும் தமது நண்பரின் பெயர் விபரங்களைப் படிவத்தில் நிரப்பியிருந்தனர். இவர்களைத் தவறுதலாக 'ஒரே பால் சேர்க்கையாளர்' என்று குடிசனத்தொகை திணைக்களம் நினைத்து அவ்வாறே பகிரங்கப்படுத்தியதால் அது சங்கடத்தில் சிக்கியுள்ளது.

இன்னும் இரண்டு மாதங்களில் குளிர் காலம் ஆரம்பமாகவுள்ளது. இவ்வருடக் குளிர்காலம் கடந்த வருடம் போலன்றி கூடிய குளிருள்ளதாகவும், நீண்ட நாட்களுக்கானதாகவும் இருக்குமென்று வானிலை அவதான நிலைய நிபுணர் டேவிட் பிலிப்ஸ் தெரிவித்துள்ளார். ஆனாலும் பனிவீச்சு குறைவாகவே இருக்குமாம். சறுக்கல் பனி இப்போதைக்கு கனடாவில் இருக்காதென்பது மகிழ்ச்சியான செய்தி.

வாகன சாரதி அனுமதிப் பத்திரம், கடன் அட்டைகள் (credit cards) ஆகியவைகளைத் தயாரித்து மோசடி புரிந்த ஒரு குழுவினர் ரொறன்ரோவின் பல பாகங்களிலும் சமகாலத்தில் பொலிசார் நடத்திய வேட்டையில் சிக்கியுள்ளனர். சுமார் நூறு பேரின் தரவுகள் திருடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க புலனாய்வுப் பிரிவினரும் இந்தக் கைது நடவடிக்கைக்குப் பெரிதும் உதவியுள்ளனர்.

## ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையின் பன்மொழிக் கற்கைத் திட்ட அதிகாரியாக நியமனம்



கனடியத் தமிழர்கள் மத்தியில் நன்கு அறிமுகமான கவிஞரும், தமிழ் ஆசிரியரும், பிரபல ஒலிபரப்பாளரும், நிகழ்ச்சித் தயாரிப்பாளரும், நல்லதொரு நாடக ஆசிரியரும், சிறந்த பேச்சாளருமான திரு. பொன்னையா விவேகானந்தன் ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையின் பன்மொழிக் கற்கைத் திட்ட அதிகாரியாக கடந்த மாதத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் தமிழகத்தின் பச்சையப்பன் பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர். தற்போது கலாநிதிப் பட்டத்துக்கான படிப்பை மேற்கொண்டு வருகின்ற வேளையில் புதிய நியமனம் இவருக்குக் கிடைத்துள்ளது.

உலகளாவிய ரீதியில் தமிழ் மொழிக் கற்கைக்கான பாடநெறிகளைத் தயாரிக்கும் பணியில் பல வருடங்களாக ஈடுபட்டுவரும் திரு. விவேகானந்தன், கனடாவில் மட்டுமன்றி இந்தியா, மலேஷியா, பிரான்ஸ் உட்பட பல மேற்கு நாடுகளில தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளைத் தொடர்ச்சியாக நடத்தி வருபவர். CTR என அழைக்கப்படும் கனடியத் தமிழ் வானொலியில் அதன் ஆரம்ப நாளிலிருந்து முழுநேர ஒலிபரப்பாளராகப் பணியாற்றிவந்த இவர் பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகளால் அனைவரதும் சிறப்பான பாராட்டைப் பெற்றவராகத் திகழும் பெருமைக்குரியவர். 'தமிழர் தகவலில்' கடந்த பல வருடங்களாக மாதாந்தம் தொடர்ச்சியாக எழுதி வரும் பொன்னையா விவேகானந்தன் தமக்கென ஒரு வாசகர் வட்டத்தை உருவாக்கி அவர்களுடன் சேர்ந்து பயணித்து வருபவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டால்ரன் மக்கன்ரி முன்னெடுத்த பலப்பரீட்சை விஷப்பரீட்சையானது!
# Dalton McGuinty beaten at own game

ஒன்ராறியோ மாகாண சபையில் சிறுபான்மையாகவிருக்கும் தமது லிபரல் அரசாங்கத்தைப் பெரும்பான்மையாக்க விரும்பிய முதலமைச்சர் டால்ரன் மக்கன்ரி, அதற்காக உருவாக்கிய இடைத்தேர்தல் என்னும் பலப்பரீட்சை ஒரு விஷப்பரீட்சையானதால், அவரது தலைமையே இப்போது கேள்விக்குரியதாகியுள்ளது.

இதற்கான மையப்புள்ளியாக அமைந்திருந்த கிச்சினர்-வாட்டர்லு தொகுதியில் என் டி. பி. அமோக வெற்றி பெற்று லிபரலை மூன்றாம் இடத்துக்குத் தள்ளிவிட்டது.

கடந்த வருடத்தில் நடைபெற்ற மாகாணத் தேர்தலில் லிபரலுக்கு 53 ஆசனங்கள் கிடைத்தன. இது அறுதிப் பெரும்பான்மைக்கு ஒன்று குறைவானது. ஆனால் கன்சர்வேடிவ் மற்றும் என். டி. பி ஆகிய இரண்டு எதிர்க்கட்சிகளும் சேர்த்து 54 ஆசனங்கள் பெற்றன. இதனால் சிறுபான்மை அரசை மட்டுமே மக்கன்ரியால் உருவாக்க முடிந்தது.

கிச்சினர்-வாட்டர்லு உறுப்பினரான கன்சர்வெடிவ்வைச் சேர்ந்த எலிசபெத் விற்மரை ஒருவாறு தம்பக்கம் இழுத்து அவரை ராஜினாமா செய்யப்பண்ணி, அங்கு இடைத்தேர்தலை உருவாக்கினார் மக்கன்ரி. எலிசபெத் விற்மருக்கு நன்றிப் பரிசாக கூடிய வருமானமுள்ள அரச பதவியொன்று வழங்கப்பட்டது..

இந்தத் தொகுதியில் இலகுவாக லிபரலால் வெற்றிபெற முடியுமென்றும், அந்த வெற்றி தனது அரசை பெரும்பான்மையாக்குமெனவும் மக்கன்ரி கண்ட கனவு நனவாகிப் போனது. கன்சர்வேடிவ் கட்சியிடம் 22 வருடங்களாகவிருந்த கிச்சினர்-வாட்டர்லு தொகுதியை என். டி. பி கைப்பற்ற ஒரு சந்தர்ப்பத்தை மக்கன்ரி ஏற்படுத்திக் கொடுத்ததுவே அவரது சாதனை.

லிபரல் தொடர்ந்தும் சிறுபான்மை அரசாகவே இருக்கின்றது. மக்கன்ரியின் பத்து வருட தலைமை தேய்வடைந்து வருவதால், அவரை இறக்குவதற்கான முயற்சி கட்சி உள்மட்டத்தில் நடைபெற்று வருகின்றது. அனேகமாக அடுத்த ஏப்ரல் மாதமளவில் ஒன்ராறியோவில் ஒரு இடைத்தேர்தல் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# கியுபெக்: ஒன்பது வருடங்களின் பின்னர் மீண்டும் குபெக்குவா வசமானது!

கியுபெக் மாகாண சபைக்கு கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில், பார்ட்டி குபெக்கா ஒன்பது வருடங்களின் பின்னர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது. 125 ஆசனங்களைக் கொண்ட இச்சபைக்கு அறுதிப்பெரும்பான்மையைப் பெற 63 ஆசனங்களைப் பெறவேண்டும். ஆனால் பார்ட்டி குபெக்காவுக்கு 54 ஆசனங்கள் மட்டுமே கிடைத்ததால் சிறுபான்மை அரசை மட்டுமே அமைக்க முடிந்துள்ளது.



தொடர்ந்து ஒன்பது வருட ஆட்சியை இங்கு நடத்திய லிபரல் 50 தொகுதிகளில் மட்டும் வெற்றிபெற்றது. இதன் தலைவரான ஷாறே தமது சொந்தத் தொகுதியில் தோல்வியடைந்ததையடுத்து கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

தேர்தலன்று இரவு பார்ட்டி குபெக்காவின் தலைவி போலின் மருவா வெற்றி உரையை நிகழ்த்த ஆரம்பிக்கையில் அந்த மண்டப வாசலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார். பலர் காயமடைந்தனர். கைதான நபர், மொன்றியல் தனி மாகாணமாக்கப்பட வேண்டுமென்று விசாரணையில் தெரிவித்துள்ளார்.

புதிய முதலமைச்சரும் அமைச்சரவையும் பதவியேற்றபோது கியுபெக் மாகாணக் கொடி மட்டுமே அங்கு பறக்கவிடப்பட்டிருந்தது. அங்கிருந்த கனடிய யேசியக்கொடி அப்புறப்படுத்தப்பட்டது. இனிமேல் கியுபெக் அரசகரும நிகழ்வுகளில் கனடிய தேசியக் கொடி பறக்கவிடப்பட மாட்டாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# வோன் தொகுதியில் லிபரல் வெற்றி

ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள வோன் (Vaughn) தொகுதியில் கடந்த மாதம் ஆறாம் திகதி நடைபெற்ற ஒன்ராறியோ மாகாண அரசுக்கான இடைத்தேர்தலில் டால்ரன் மக்கன்ரியின் லிபரல் கட்சி மீண்டும் வெற்றி பெற்றது. இந்தத் தொகுதியின் உறுப்பினராக நீண்ட காலமிருந்த லிபரலின் முன்னாள் நிதியமைச்சர் கிறெக் சோர்பரா அரசியலிலிருந்து ஓய்வுபெற்றதால் இங்கு இடைத்தேர்தல் நடைபெற்றது.

# 30 தொகுதிகளுக்கு மக்கள் அபிப்பிராயம்

கனடிய நாடாளுமன்றத்துக்கு புதிதாக உருவாக்கப்படும் 30 தொகுதிகள் தொடர்பாக பொதுமக்கள் அபிப்பிராயம் இப்போது கோரப்பட்டுள்ளது. இதற்கான ஆணைக்குழுவின் பகிரங்க அமர்வு ரொறன்ரோ மெட்ரோ ஹோலில் நவம்பர் 15ஆம் திகதியும், நோர்த் யோர்க் சிவிக் சென்டரில் நவம்பர் 14ஆம் திகதியும் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# உங்கள் தோற்றம் திருப்தியளிக்க...

தோள்மூட்டு, புஜம், கைகளில் ஏற்படும் வலி உளைவு எரிவுகளுக்குக் காரணம் கழுத்து எலும்புத் தேய்வாக இருக்கலாம்

அழுதுவிடுவாள் போலிருந்தது. சில இரவுகளில் ஒழுங்கான தூக்கம் இல்லாததால் கண்கள் கரு வளையம் சூழ்ந்திருந்தன. முகம் சோர்ந்தது மாத்திரமின்றிப் பூசினிப்பழம்போல ஊதியும் கிடந்தது. சோர்வுக்குக் காரணம் மனத்துயரம் அல்ல என்பது அவள் பேசத் தொடங்கியதும் புரிந்தது.

வலி' தாங்க முடியாத வலி. முதுகின் சீப்புப் பகுதியில். உளைவா வலியா என்று பிரித்தறிய முடியாத வேதனை. அங்கிருந்த வலி மேலும் நகர்ந்து இடது கை முழுவதும் பரவி உளைந்து கொண்டிருந்தது. நான் துருவித் துருவிக் கேட்டபோது அக்கை நுனியில் சற்று விறைத்து மரத்திருப்பதும் தெரியவந்தது.
ஒரிரு மாதங்களாக வலி இருக்கிறதாம். உளைவா, எரிவா, வலியா என்று பிரித்துச் சொல்ல முடியாத ஏதோவொரு கடுமையான வேதனை. ஆரம்பத்தில் ஓரளவாக இருந்தது, வர வர அதிகரித்துக் கொண்டே வருகிறது.

கை வைத்தியம், நாட்டு வைத்தியம் எதுவும் சுகம் கொடுக்கவில்லை. அருகிலிருந்த மருத்துவரிடம் காட்டியபோது தசைப்பிடிப்பாக இருக்கும் எனச் சொல்லி அவ்விடத்தில் ஊசி ஏற்றியிருக்கிறார். ஆயினும் அந்த ஊசியிலும் எந்தச் சுகமுமில்லை.

கழுத்து எலும்புத் தேய்வு நோய்:
அனுபவப்பட்ட மருத்துவர்களுக்கு அத்தகைய வலிக்கான காரணம் வலிக்கும் அதே இடத்தில் இல்லை. வேறு இடத்திலுள்ள நோய்க்கான வலி இங்கு பிரதிபலிக்கிறது என்பது தெரிந்திருக்கும். பெரும்பாலும் கழுத்து எலும்புடன் சேர்ந்த Cervical spondylosis என ஊகிப்பதில் பிரச்சனை இருக்காது. நிச்சயப்படுத்த பரிசோதனைகள் தேவைப்படும்.

நோய் ஓரிடத்தில் இருக்க வலி வேறு ஒரு இடத்தில் பிரதிபலிப்பதை தொலைவிட வலி (Referred Pain) என்பார்கள். இதனைக் கழுத்து எலும்புத் தேய்வு நோய் என்று சொல்லலாம். வயதாகும்போது ஏனைய எலும்புகளில் தேய்மானம் ஏற்படுவதுபோலவே கழுத்தின் முன்னெலும்பிலும் ஏற்படுவதுண்டு. 40 வயதிற்கு மேல் இத்தகைய பிரச்சனை ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகமாகும். பொதுவாக வலி தொடர்ச்சியாக இருப்பதில்லை. விட்டுவிட்டு வரும். அத்துடன் கழுத்துத் தசைகள் இறுக்கமாகவும் இருக்கும்.

கழுத்து எலும்புகளின் அமைப்பும் பாதிப்பும்:
கழுத்து எலும்புகள் ஏனைய முதுகெலும்புகள் போலவே ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டிருக்கின்றன. அவை தம்மிடையேயான அசைவாட்டத்திற்காக வட்டுகள் எனப்படும் Intervertebral disc யால் இணைக்கப்பட்டுள்ளன. முள்ளெலும்புகள் தேய்வதாலும், தேய்ந்த எலும்புகள் இடையேயுள்ள வட்டுகளை அழுத்துவதாலும், சிறு எலும்புத் துணிக்கைகள் வளர்வதாலும், முண்ணான், அதிலிருந்து வெளியேறும் நரம்புகள் அழுத்தப்படுவதாலும்தான் வலி, வேதனை நரம்புப் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

நரம்புகள் அழுத்துண்டால்:
ஆனால் இது மோசமாகி, அவற்றிடையே உள்ள இடைவெளி சுருங்கி அதனூடாக வெளிவரும் நரம்புகளை அழுத்துவதால் வலி அதிகமாகும். இதன் அறிகுறிகளாக பின்வருவனவற்றைக் கூறலாம். கழுத்தில் வலியும், அதன் தசைகளில் இறுக்கமும் பிடிப்பும். இவ் வலியானது தோள் மூட்டு, புஜம், நெஞ்சு போன்ற இடங்களுக்குப் பரவக்கூடும். புஜங்கள், கை, கால்கள், பாதம் போன்ற இடங்களில் ஊசியால் குத்துவது போன்ற வலி, உளைவு, எரிவு போன்ற அறிகுறிகள் தோன்றலாம்.
கைகள், விரல்கள், பாதம் போன்ற இடங்கள் மரத்தது போன்ற உணர்வு ஏற்படலாம். சிலவேளை அங்குள்ள தசைகள் பலமிழப்பதுமுண்டு. விரல்களால் பற்றுவது சிரமமாக இருக்கலாம்.
நடப்பதில் சிரமம் ஏற்படக் கூடும். நிலைதளரக் கூடும். மலம், சிறுநீர் கழிப்பதில் உள்ள கட்டுப்பாடு குறைந்து, தன்னுணர்வின்றி அவை வெளியேறக் கூடும். இது சற்றுத் தீவிரமான நிலையில் தோன்றும்.

நோயை எப்படிக் கண்டறிவது?
ஆரம்ப நிலையில் கழுத்தினது அசைவு, வலியுள்ள இடங்கள் ஆகியவற்றைப் பரிசோதிப்பதுடன், நரம்புப் பாதிப்புகள் இருக்கிறதா என மருத்துவர் உடற்பரிசோதனை செய்வதுடன் நோயைக் கண்டறிவார். X Ray பரிசோதனை செய்வதன் மூலம் கழுத்து எலும்புகளின் நிலை பற்றி அறிந்து கொள்ள முடியும். தேவை ஏற்படின் CT scan, MRI போன்ற பரிசோதனைகள் செய்வார். நரம்புகள் எந்தளவு வேகமாகவும், திறமையாகவும் செயலாற்றுகின்றன என அறிய Nerve conduction study பரிசோதனையும் உதவலாம்.

சிகிச்சை
சாதாரண வலிகளுக்கு சுடுநீர் ஒத்தடம் கொடுப்பது, வலி நிவாரணி ஜெல் பூசுதல், தசைகளைப் பிடித்துவிடுதல், மெதுமையான மசாஜ் போன்றவை உதவும். சற்றுக் கடுமையான வலியெனில் வலிநிவாரணி மாத்திரைகள் தேவைப்படும். கழுத்திற்கு கொலர் (Cervical Collar) அணிவது உதவும். கடுமையெனில் சத்திரசிகிச்சையும் தேவைப்படலாம்.

நீங்கள் செய்யக் கூடிய ஏனையவை:
தலையக் குனிந்து செய்யும் வேலைகளைக் குறையுங்கள். புத்தகம் படிப்பது, சமையல் வேலை போன்றவற்றின்போது கவனம் எடுக்கவும். குறைந்த தடிப்பமுள்ள தலையணையை மாத்திரம் உபயோகியுங்கள். கழுத்தை ஒரே பக்கமாக நீண்ட நேரம் திருப்பி வைத்திருப்பதைத் தவிருங்கள். நடுவில் பள்ளமுள்ள விசேட தலையணைகள் நல்லது. முகம் குப்புறப்படுக்க வேண்டாம். தலையில் பாரங்கள் சுமக்க வேண்டாம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# 9ம் வகுப்பு மாணவர்களும் ஒத்த குழுக்களின் தாக்கமும் – I
## Grade 9 students and peer pressure – I

9ம் வகுப்புக்கு அதாவது இரண்டாம் நிலைப் பாடசாலைக்குப் பிள்ளைகள் வந்தவுடன் பெருமைப்படாத பெற்றோர்களே இல்லை எனலாம். 'இன்னும் நான்கு வருடங்கள் கண்மூடி முழிக்குமுன்பு போய்விடும். பிறகு என்ன பிள்ளை பல்கலைக்கழகம் சென்று விடுவான்' என்றே பல பெற்றோர்களும் நினைக்கிறார்கள். ஆனால் பெற்றோரின் கனவுகளில் மண்ணைத் தூவும் பிள்ளைகள் பலரைக் காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய இடரை ஏற்படுத்துவது ஒத்த குழுக்களின் தாக்கமே. மழலை மாறாத குழந்தைகள்போல் இரண்டாம் நிலைப் பாடசாலைக்குள் காலடி எடுத்து வைக்கும் மாணவர்களில் சிலர் ஆறுமாத காலத்தில் முகம் மாறி, குணம் மாறி பெரும் பிரச்சனைகளுக்குள் மாட்டிக் கொள்வதை எனது அனுபவத்தில் கண்டுள்ளேன். அதேசமயம் எதிர்கால நோக்குகளைத் திட்டவட்டமாக அமைத்து அதற்கமைய நாளாந்தம் பாடவேலைகளைச் செய்து திறம்படச் செயலாற்றும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை.

'The North American High School is a jungle' என்பது சாதாரண பேச்சு வழக்கிலுள்ள ஒரு கூற்றாகும். அதாவது வடஅமெரிக்க உயர் பாடசாலைகள் காடுகளுக்குச் சமன் என்பதாகும். காடுகளில் எத்தனையோ விலங்குகளும், அபாயங்களும் காணப்படுகின்றன. அதேசமயம் காடுகள் எவ்வளவோ நற்பயன்களையும் வழங்குகின்றன. அதேபோல்தான் ஒரு மாணவனின் எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டிய திறன்களையும், கல்வியையும் உயர்நிலைப் பாடசாலைகள் வழங்குகின்றன. ஆனால் நண்பர்களின் சகவாசதோசத்தால் கெட்டழிந்து போகும் இடமும் உயர்நிலைப் பாடசாலைகள் தான்.

இந் நாட்டில் ஒரு மாணவனின் நேரசூசி 8ம் வகுப்புவரை வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் ஒரேமாதிரித்தான் அமையும். அதாவது பாடல்களுக்கிடையில் 'போதனை இல்லாத நேரம்' (Spare periods) இருக்க மாட்டாது. பெற்றோர் பிள்ளைகளைக் காலையில் பாடசாலையில் விட்டால் பாடசாலை முடிந்தபின்புதான் பிள்ளைகள் வீடு திரும்ப முடியும். ஆனால் இரண்டாம் நிலைப் பாடசாலை நேரசூசியோ இதற்கு முற்றிலும் வேறுபட்டது. ஒரு பாடநேரம் கிட்டத்தட்ட ஒன்றேகால் மணித்தியாலங்களைக் கொண்டிருக்கும். ஒரு நாளைக்கு நேரசூசியில் 5 பாடநேரங்கள் இருக்கும். இதில் கட்டாயமாக ஒரு போதனை இல்லாத நேரமும், மதியபோசன நேரமும் உண்டு. அதாவது ஒவ்வொரு நாளும் மாணவர்கள் தங்கள் சகாக்களுடன் அளவளாவவும், குழப்படி செய்யவும், வெளியில் சென்று கடைகளில் போய் கும்மாளம் போடவும் இரண்டரை மணித்தியாலங்கள் உண்டு. இந்த நேரத்தில்தான் இவர்கள் தமது சகபாடிகளுடன் பிரச்சனைகளில் மாட்டுப்படும் நேரம் ஆரம்பமாகிறது. பின்பு இவர்கள் தமது ஒத்த குழுக்களை விட்டுப்பிரிய மனம் இல்லாமல் பாடநேரங்களிலும் வகுப்புக்குச் சமுகமளிக்காமல் தமது நடவடிக்கைகளைத் தொடருவதுண்டு. சில மாணவர்கள் முழுப் பாடநேரத்தையுமே தவறவிட்டு விடுவார்கள் (skip). சிலர் வகுப்புத் தொடங்கி எத்தனையோ நிமிடங்களுக்குப் பிறகு ஓடிவந்து வகுப்பிற்குள் அமர்வதும் உண்டு.

பெற்றோர் வேலைக்குச் செல்லும் பொழுது தமக்கு முதலாம் பாடம் இல்லை எனச் சொல்லி சில மாணவர்கள் வீட்டிலே நித்திரை கொள்வார்கள். அது உண்மையாகவும் இருக்கும். சில பிள்ளைகள் கடைசிப் பாடம் இல்லை எனச் சொல்லி நேரத்தோடு வீட்டிற்கு வந்துவிடுவார்கள். பெற்றோரை ஏமாற்றுவதற்கும், ஒத்த குழுக்கள் வீட்டிற்கு வந்துபோகவும் இப் பாடநேரங்கள் மிகவும் வசதியாக அமைகின்றன. ஆனால் உண்மையிலே இந்த போதனை இல்லாத நேரம் மாணவர்கள் நூல்நிலையத்திற்குச் சென்று தமது ஒப்படைகளை செய்வதற்கு வேண்டிய உசாவுதலையும், குழு அங்கத்தவர்களோடு கலந்து உரையாடுவதற்காகவுமே ஏற்படுத்தப்பட்டன. முதலாம் பாடமோ, கடைசிப் பாடமோ வெற்றிட பாடமாக இருப்பது பகுதி நேர வேலைக்கு போவதற்கு மாணவர்களுக்கு உதவுவதற்கேயாகும். இந்த நோக்கங்களுக்கமைய இவற்றை பிரயோசனப்படுத்தும் மாணவர்கள் ஏராளமாக உண்டு.

இந்நாட்டில் பொதுவாகப் பாடசாலைகள் கலவன் பாடசாலைகளாகவே அமைகின்றன. 14, 15 வயது என்பது ஒரு அறியாப் பருவம். கட்டிளமைப் பருவத்திற்கே உரிய குணாதிசயங்களின் ஆரம்பகாலம். இங்குள்ள பாடசாலைகள் எந்த ஒரு பாலியல் நடவடிக்கையையும் ஏற்றுக் கொள்கிறது. பாடசாலைகளில் பாலியல் நடவடிக்கைகள் சம்பந்தமாகக் காணப்படும் அதீத சுதந்திரம் பல மாணவர்களை தவறான பாதையில் இட்டுச் செல்கிறது. ஒத்த குழுக்களின் தாக்கமும் இங்கு பெரியதொரு இடத்தைப் பிடிக்கிறது. தமது நண்பர்கள் பலருக்கு காதலர், காதலிகள் இருப்பின் தானும் அவ்வாறு இல்லாவிட்டால் தன்னை நண்பர்கள் குழு ஏற்றுக் கொள்ள மாட்டாது என்ற ஒரு தாழ்வு மனப்பான்மையும் பல மாணவர்களை தவறான நடத்தையில் இட்டுச் செல்வதையும் காண்கிறோம். இவ்வாறு உறவுகளில் ஈடுபடும் பிள்ளைகளின் பாடஅடைவுகள் பொதுவாகப் பின்னடைவு அடைவதை நாளாந்தம் கண்டிருக்கிறேன். சில பிள்ளைகள் எந்த நேரமும் புத்தகமும், கையுமாக இருப்பதும் உண்டு. இவ்வாறு சமூகத் திறன்கள் இல்லாமல் புத்தகப் பூச்சிகளாக இருக்கும் மாணவர்கள் ஏனைய மாணவர்களின் பகிடி வதைகளுக்கு ஆளாகி அவமானப்படுவதிலிருந்து தப்புவதற்காகக்கூடச் சில வேண்டாத உறவுகளை ஏற்படுத்துவார்கள். பின்பு அவற்றைக் கையாளத் தெரியாமல் விடாத பிழைகளுக்காக பிரச்சனைகளில் மாட்டிக் கொள்வதும் உண்டு. Girl friend, Boy friend என்ற உறவுகளைக் கூட ஒத்த குழுக்களால் கணிக்கப்பட வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தும் மாணவர்கள் ஏராளம் உண்டு.

இந்த ஒத்த குழுக்களின் தாக்கத்தை மாணவர்களின் உடை அலங்காரங்களில்கூடக் காணலாம். 8ம் வகுப்புவரை பெற்றோர் தமது பொருளாதார வசதிக்கேற்ப வாங்கிக் கொடுக்கும் உடைகளையே மாணவர்கள் அணிகிறார்கள். ஆனால் இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் ஒத்த குழுக்கள் தமது செல்வாக்கைக் காட்டுவதற்காக விலையுயர்ந்த (Name Brands) உடுப்புகளை அணிவதுண்டு. பல மாணவர்கள் சிறு சிறு பகுதிநேர வேலைகளுக்குச் செல்வதுண்டு. தமது ஊதியம் முழுவதையுமே உடுப்பு, சப்பாத்து வாங்குவதிலேயே செலவழிக்கிறார்கள். இதனைக் கூடப் பெற்றோரால் கண்டும் காணாதது போல் இருக்க முடியும். ஆனால் இவ்வயதிலேதான் பல துர்நடத்தைகளை அனுபவித்து, பரீட்சித்துப் பார்க்க வேண்டும் (experiment) என்ற ஆசை ஏற்படுவதும் உண்டு. போதைப் பொருட்கள், குடிவகைகள், புகைத்தல் முதலியவற்றை →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

25

நாம் மனத்தால் வாழ்கிறோம் என்பது அடிப்படை உண்மை. நமது செயல்களின் ஆரம்பம் நமது எண்ணங்கள். நமது எண்ணங்களின் பிறப்பிடம் மனம். எனவே மனத்தை நம் கைவசம் வைத்திருக்க வேண்டும். அதன் உள்ளே புகும் எண்ணங்களையும் ஆசைகளையும் பற்றி மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நம் மனத்தில் நல்ல எண்ணங்களை, புனிதமான எண்ணங்களை உள்ளே விடவேண்டும், அவற்றை நிரந்தரமாக்கவும் வேண்டும். இதற்கு மாறாக பொறாமையும், பயமும், துயரமும், தவறும் நிறைந்த எண்ணங்களை நம்முள்ளே விடுவதன் மூலம் நமக்கு நாமே தண்டனை கொடுத்துக் கொள்கிறோம். நமது வாழ்வினை துயர் நிறைந்ததாக மாற்றி விடுகிறோம்.

நம் மன இயக்கத்தினை நிர்வகிக்கும் முழுப்பொறுப்பும் நமது கையிலேயே உள்ளது என்ற தொடர்சிந்தனை சதா ஓடிக் கொண்டிருக்க வேண்டும். மற்றவர்களது கோபச் சொல் அல்லது ஒரு நிகழ்ச்சி, அல்லது ஒரு பார்வை நம் உணர்ச்சிகளை தூண்டிவிடுகிறது. இதனால் எமக்கும் கோபம் வருகிறது, பயம் வருகிறது, பழிவாங்கும் எண்ணம் பிறக்கிறது. இந்த உணர்வுகள் எண்ணங்களின் பிரதிபலன். இந்த நிலையில் நமது சிந்தனைத் திறன் பயன்படுகிறது. இதற்காகவா நான் கோபப்பட்டேன், பயந்தேன், பழிவாங்க துடித்தேன் என்ற எண்ணமும் தொடர்கிறது. அங்குதான் உணர்வுக் கட்டுப்பாடு தேவையாகிறது. எண்ணம் மனதிலிருந்து பிறப்பதால் உடலிலிருந்து உணர்வுகள் பிறக்கின்றன. எண்ணம் எங்களுடையது. காரணம் இன்னொருவர் புகமுடியாது. இதனால்தான் எண்ணங்கள் பற்றி மிகவும் அவதானம் தேவை. தென்றலாகவும் புயலாகவும் சூறாவளியாகவும் மாறும். எமது உணர்வுகள் எம்மையே புரட்டிப்போட வல்லவை.

நம்மில் பலரிடம் தாழ்வு மனப்பான்மை உள்ளது. இது நாம் பேசும் பேச்சுக்கள் மூலமாகவும், செயல் மூலமாகவும் வெளிப்படுகிறது. தன்னைத் தாழ்த்திக் கொண்டு உண்மை நிலையை மறக்கிறோம். மனதிற்கு தேவையான ஓர் ஊக்கத்தினை, ஒரு நம்பிக்கையை கொடுக்க தவறுகிறோம். ஒரு இடத்திற்கு செல்லும்போது என்னையே மற்றவர்கள் பார்க்கிறார்கள் எனவும் நினைவு கொள்வோர் பலர்.
மனம் காலை முதல் எப்படி செயல்படுகிறது என்று எண்ணினால் வியப்பே தோன்றும். உண்மையான மனம் பாரதி கூறியது போன்று "சின்னஞ்சிறு கதைகள் பேசி, வாடிப்பல மிக உழன்று, வாடப் பல செயல்கள் செய்து" என்ற நிலைக்கு செல்லாது, பதிலாக பிறருடன் கொள்ளும் உறவு, ஈடுபாடு, பெருந்தன்மை என்பவை உண்மையான ஆனந்தத்தினை அள்ளி வழங்கும். இதுவே மகிழ்ச்சி நிறைந்ததாய், பிறரை மகிழ வைக்கும் முயற்சியாய், உலகில் கருத்துக் கொள்ளும் நல்லெண்ணமாய் மலர்கிறது. எதிரியை கூட மன்னிக்க செய்கின்றது. இந்த வாழ்க்கையை ஒருமுறைதான் வாழ்கிறோம், அதுவும் மிக குறுகியது. இதனை அழகாக, மகிழ்வுடன் வாழ மனத்தினை உறுதி கொள்வோம்.

மனதிலுறுதி வேண்டும் - பாரதி●

நண்பர்களோடு அனுபவித்து பின்பு அவற்றிற்கு அடிமையாகும் மாணவர்களும் உண்டு. மனக் கட்டுப்பாடு உடைய மாணவர்கள் இவை என்னவென்று தெரிந்தபின்பு இவற்றை அறவே விடுவதும் உண்டு.

8ம் வகுப்புவரை சிறுபிள்ளைகள்போல் பாடசாலையில் நடந்த எல்லா விசயங்களையும் அன்றாடம் அதிகமான மாணவர்கள் வீட்டில் கூறுவார்கள். ஆனால் 9ம் வகுப்புக்கு வந்த பின்பு தாங்கள் ஏதோ பெரிய மனுஷர்கள் போல் தாமே எல்லா விடயங்களையும் கையாளுவார்கள். அதுவும் அல்லாமல் நண்பர்களைக் குறை கூறினால் அதன் பின்பு ஒன்றுமே அவர்கள் வாயில் இருந்து எடுக்க முடியாது. இந்த வயதில் இவர்களின் உலகமே நண்பர்கள்தான். பெற்றோர்தான் அவதானமாக இருந்து பிள்ளைகள் சரியான நண்பர்களோடு தொடர்பு வைத்திருக்கிறார்களா எனப் பார்த்துக் கொள்ள வேண்டும். பெற்றோரின் கண்காணிப்பில்தான் 9ம் வகுப்பு மாணவர்களின் இரண்டாம் நிலைப் பாடசாலையின் வெற்றி, தோல்வி தங்கியுள்ளது.●

## சர்வதேச சந்தையில் பேஸ்புக் பாரிய வீழ்ச்சி

சமூக வலைத்தளமான 'பேஸ்புக்' (Face book) பங்கின் மதிப்புகள் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் பெருமளவில் விளம்பரப்படுத்தப்பட்டு விற்கப்பட்டு வந்த நிலையில், தற்போது கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளன.

சமீபத்தில் ஒரு பில்லியன் டாலர்களை திரட்டும் வகையில் பங்கு சந்தைக்குள் நுழைந்த பிறகு பேஸ்புக், தனது நிதிநிலை அறிக்கையில் 160 மில்லியன் டாலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

அந்நிறுவனத்தின் வளர்ச்சி குறைந்துள்ளது என்று வந்துள்ள செய்திகளை அடுத்து, அதில் முதலீடு செய்தவர்கள் குறிப்பாக கவலையடைந்துள்ளனர் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாகவே 'பேஸ்புக்' பங்கின் மதிப்புகள் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அ. முத்துலிங்கம்

# இரவாகவே விடிந்தது

தற்செயலாகத்தான் அன்று நாட்டுக்கூத்துக்கு போவதென்று முடிவானது. விஜய மனோகரன் என்னும் தென்மோடி நாட்டுக்கூத்து கனடிய கிறிஸ்தவக் கல்லூரி அரங்கத்தில் சனிக்கிழமை மாலை, 11 ஆகஸ்ட் அன்று நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் கனடாவில் மேடையேறிய நாட்டுக்கூத்துகள் என் மனதில் பெரிய அதிர்வை ஏற்படுத்தவில்லை. ஆகவே அரைமனதோடுதான் நிகழ்ச்சியை பார்க்கப் போனேன். இந்த நாட்டுக்கூத்தைப் பார்க்க அன்று நான் தவறியிருந்தால் அந்த இழப்பு எவ்வளவு பெரிதாக இருந்திருக்கும் என இப்போது உணர்கிறேன்.

கனடா போன்ற ஒரு தேசத்தில் பாரம்பரிய தமிழ்க் கலையான நாட்டுக்கூத்தை மேடையேற்றுவதில் பல சங்கடங்கள் உள்ளன. கிராமங்களில் கூத்து இரவு நேரத்தில் தொடங்கி அடுத்தநாள் காலைதான் முடிவுக்கு வரும். ஒலிபெருக்கி இல்லாத காலமாதலால் நடிகர்கள் எட்டுக்கட்டை சுருதியில் பாடும் குரல்வளம் கொண்டவர்களாக இருக்கவேண்டும். நடிகர்களுக்கு பாடவும் ஆடவும் நடிக்கவும் வசனம் பேசவும் தெரிவது அவசியம். இந்த நிலைமையில் கனடாவில் எப்படி கூத்துபோட முடியும்? ஆனால் இத்தனை பிரச்சினைகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டிருக்கிறார் இலங்கையில் தேசியவிருது பெற்ற பிரபல நெறியாளர் ம.ஜேசுதாசன். இவருடைய முயற்சியால் நாட்டுக்கூத்து இரண்டரை மணி நேரமாக சுருக்கப்பட்டிருக்கிறது. பாத்திரங்களுக்கு ஏற்ற நடிகர்களை தேர்வுசெய்து நாலு மாதகாலமாக தீவிர பயிற்சி கொடுத்த பின்னர்தான் கூத்தை மேடையேற்றியிருக்கிறார். நாட்டுக்கூத்தில் ஒலியின் முக்கியத்துவத்தை சொல்ல வேண்டியதில்லை. ஒவ்வொரு நடிகரின் உடையிலும் கண்ணுக்குத் தெரியாத ஓர் ஒலிவாங்கி பொருத்தப்பட்டிருந்ததால் அரங்கத்தின் கடைசியில் இருந்தவருக்கும் குரல் கணீரென்று கேட்டது. மிகச்சிக்கலான மின்விளக்கு அமைப்பு கொண்ட மேடையை நாடகத்துக்கு பொருத்தமானவிதமாக பயன்படுத்தியிருந்தார்கள். இப்படி நாட்டுக்கூத்து போன்ற பழைய கலைவடிவத்தை நவீன தொழில்நுட்ப உத்திகளால் மேம்படுத்தியிருந்தது எதிர்பாராத விருந்தாக அமைந்தது.

விஜய மனோகரன் நாட்டுக்கூத்து யாழ்ப்பாணத்து கரையோரப் பகுதிகளில் மிகவும் பிரபலமானது. அதன் கதைச்சுருக்கம் இதுதான். இராச்சிய பரிபாலனத்தில் சோர்வடைந்த கோதி மன்னன் ஒருநாள் நாட்டின் விடிவுக்காக தவம் செய்ய எண்ணி ஆட்சியை ஆஞ்சலோ என்னும் பிரபுவிடம் ஒப்படைத்துவிட்டு காடு செல்கிறார். அரசானாக பதவியேற்ற ஆஞ்சலோ நாட்டின் சட்டதிட்டங்களை மாற்றி மக்களை வதைத்து கொடிய ஆட்சி புரிகிறான். இவனது இராச்சியத்தில் விக்கிரமசிங்கன், உக்கிரமசிங்கன் என்னும் நண்பர் இருவர் கொலை கொள்ளை கற்பழிப்புகளை அரசனின் அனுசரணையுடன் செய்து வந்தனர். விஜயன், மனோகரன் ஆகிய இருவர் நேர்மை நெறி தவறாது வாழும் நண்பர்கள். விக்கிரமசிங்கன், விஜயனின் தங்கையான ஞானத்தை திருமணம் செய்ய வெறிகொண்டிருக்கிறான். இதற்கு விஜயனும் அவனது தங்கையும் சம்மதம் கொடுக்காத காரணத்தால் ஞானத்தை கடத்திசெல்ல முயன்றபொழுது விஜயனின் நண்பன் மனோகரன் அவளை காப்பாற்றுகிறான். இதனால் கோபமடைந்த விக்ரமசிங்கனும், உக்கிரமசிங்கனும் அரசன் ஆஞ்சலோவிடம் விஜயனும் மனோகரனும் அரசனுக்கெதிராக சதி-செய்கிறார்கள் என பொய் குற்றம் சுமத்துகிறார்கள். இதைக்கேட்டு ஆத்திரமடைந்த ஆஞ்சலோ விஜனையும் மனோகரனையும் தூக்கிலிட கட்டளையிடுகிறான். வனம் சென்ற கோதி மன்னன் இதையறிந்து மீண்டும் நாட்டிற்கு வந்து விஜயனையும் மனோகரனையும் காப்பாற்றி நாட்டையும் மீட்டெடுக்கிறான்.



நடிகர்கள் அனைவரும் தங்கள் தங்கள் பாத்திரங்களை உணர்ந்து சிறப்பாக நடித்ததால் ஒவ்வொருவர் பெயரையும் குறிப்பிட்டு பாராட்டும் தேவை இல்லை. எனினும் ஒன்றிரண்டு பேரின் நடிப்பைப்பற்றி சொல்லித்தான் ஆகவேண்டும். கொடுங்கோல் அரசன் ஆஞ்சலோவாக நடித்த ஜோசப் அந்தோனிப்பிள்ளை. கண்களை உருட்டி, நெஞ்சை நிமிர்த்தி மிடுக்குடன் கால்களை தாளக்கட்டுக்கு உதைத்து ஆடியது நினைவில் நிற்கிறது. விஜயனாக நடித்த அன்ரன் அருக்கன்சிப்பிள்ளை வசனம் பேசும்போது அத்தனை நறுக்காகவும் உச்சரிப்பு சுத்தமாகவும் பேசினார். விக்கிரமசிங்கனாக நடித்த அல்ஃபிரெட் பிலிப்புபிள்ளையின் அகலமான உடற்கட்டும், ஆடையலங்காரமும், காத்திரமான குரலும் பாத்திரத்துக்கு மிகப் பொருத்தமாக அமைந்து அவர் மேடையில் தோன்றும்போதெல்லாம் சபையில் சலசலப்பு ஏற்படக் காரணமாயிருந்தது. விஜயன் நீண்ட வசனம் பேசி நிறுத்த விக்கிரமசிங்கனிடம் பதிலாக 'ஊம்' என்ற உறுமல் மாத்திரம் வரும். சபையில் கரகோஷம் எழும். கதாநாயகி ஞானமாக நடித்த பெண் லெஃபன்ரா அந்தோனிப்பிள்ளை. இவர் கனடாவில் பிறந்து வளர்ந்தவர். அருமையான தமிழ் உச்சரிப்பில் பேசியும், பாடியும் ஆடியும் நடித்தும் சபையோர் மனத்தில் இலகுவாக இடம்பிடித்தார்.

ஒரு காட்சி முடிந்து திரை விழுந்ததும் 'அட, இத்தனை அழகாகச் செய்திருக்கிறார்களே' அடுத்த காட்சி என்னவாயிருக்கும்?' என்று யோசனை எழும். உடனேயே திரை இழுபட்டு அடுத்த காட்சி தொடங்கும். அதைப் பார்த்தால் முந்திய காட்சியிலும் பார்க்க ஒரு படி மேலானதாகத் தோன்றும். சரி என்று அடுத்த காட்சிக்கு தயாராவோம். அது இன்னும் மெருகேறிக்கொண்டு போகும். இப்படி ஒவ்வொரு காட்சியும் ஒன்றை ஒன்று முந்திக்கொண்டு நிற்கும். என் நண்பர் ஒருவர் பனிக்காலத்தில் ஐஸ்லாந்துக்கு போனார். அங்கே இரவு முடிந்து அடுத்த நாளுக்கு காத்திருந்தபோது அடுத்த நாளும் இரவாகவே விடிந்தது என்றார். அதுதான் ஞாபகத்துக்கு வந்தது.

கோதி மன்னன் காட்டுக்கு தவம் செய்யப் புறப்பட்டபோது ராணி அவனை போகவேண்டாம் என்று தடுப்பார். மன்னனோ மனம் மாறவில்லை, ஆனால் ராணி தொடர்ந்து கெஞ்சுவார். சேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீஸர் நாடகத்தில் சீஸரை அரசவைக்கு செல்லவேண்டாம் என மன்றாடும் கல்பூர்னியாவை இந்த இடம் ஞாபகமூட்டும். சொற்ப நேரமே ராணி மேடையில் தோன்றினாலும் நாடகம் உயிர்பெறுவது அங்குதான். ராணியின் அழகும், உணர்ச்சி பாவமான நடிப்பும், பாட்டும், ஆட்டமும், வசனமும் மனதை தொடுவதாக அமைந்திருந்தன. இதிலே எல்லோரையும் ஆச்சரியப்படவைத்த விசயம் ராணியாக நடித்த பெண்மணி கனடிய பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைசன். இவருடைய நடிப்பை பார்த்தபோது பாரம்பரிய தமிழ்கலைகளில் ஒன்றான தென்மோடி நாட்டுக்கூத்து புலம்பெயர் சூழலில் வலுவாக காலூன்றி வளர்ந்துவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. (31ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*



# உணவு தினம்

அக்டோபர் மாதம் 16 ம் திகதியை சர்வதேச உணவு தினமாக 150 நாடுகளில் சுவைக்கின்றனர்.

1945 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் உணவு மற்றும் விவசாய பிரிவு உருவானது. 1979ம் ஆண்டு இவ்வமைப்பின் 20 ஆவது பொதுமாநாட்டில் முதன்முதலாக சர்வதேச உணவு தினம் பரிமாறப் பெற்றது.

ஆரோக்கிய வாழ்வுக்கு உகந்த உணவு பற்றிய அறிவை அதிகரிப்பதையும், மனித நாகரிகத்தின் வளர்ச்சி ஊடாக வாழுமிடங்களின் சூழ்நிலைக்கு ஏற்ற சுவையுணர்வு பற்றி விளக்கமளிப்பதையும், உடலுக்கும் உலகிற்கும் உதவாத உணவின் சிக்கலான விடயங்களை அறிவிப்பதையும் இத்தினம் விசேட விருந்து ஆக்கும் என்ற ஆவல் உள்ளவர்கள் சுவைஞர்கள்.

மருந்தே உணவு என்றால் அது மருத்துவம். உணவே மருந்து என்றால் அது மகத்துவம் என்ற அமிர்தத்தை பிரமாதமாய் நிவேதிக்கும் தினம் சர்வதேச உணவு தினம் என்ற எண்ணம் உணவுப்பிரியர்கள் பலரிடம் இன்றும் உள்ளது.

துவர்ப்பு ரத்த அணுக்களை பெருக்கும். இனிப்பு தசையை வளர்க்கும். புளிப்பு கொழுப்பைக் கூட்டும். கார்ப்பு எலும்பை உறுதியாக்கும். கசப்பு நரம்பை வலுவாக்கும். உவர்ப்பு உமிழ் நீரை சுரக்கும். எனவே அறுசுவைகளும் சமமாகக் கலந்த உணவை உண்ணுங்கள். உடல் வலிமையாக இருக்கும். நீண்ட நாள் வாழலாம். எந்த நோயையும் எதிர்த்துப் போராடலாம் என்பதனை மீண்டும் மீண்டும் புதிய வடிவில் பிசைந்து ஊட்டுவதுதான் சர்வதேச உணவு தினம் என ஏப்பம் விடுபவர்களும் உண்டு.

ஒரு பாத்திரத்தில் 4 கோப்பை தண்ணீர் விட்டு அதில் சவ்வரிசியைப் போட்டு நன்கு வேக வைக்கவும். நன்கு வெந்த பின் சீனியைப் போடவும். 10 நிமிடங்கள் மெல்லிய சூட்டில் அதை வேகவிட்டு இறுதியாக டின் பால் அல்லது பால் சேர்க்கவும். கஜு பிளம்ஸ் என்பனவற்றை நெய்யில் வறுத்து அதில் போடவும். கடைசியாக ஒரு கலக்கு கலக்கி இறக்கும் பொழுது மறக்காமல் ஏலம் போடவும்.

இனிப்பில் ஏலக்காயைப் போடுவது வெறும் வாசத்துக்காக மட்டும் அல்ல. இனிப்பு எங்கெல்லாம் சேர்கிறதோ அங்கெல்லாம் ஏலம் இருக்க வேண்டும் என்பது தமிழர் உணவு விதி. இனிப்பு உருவாக்கும் சளி பிடிக்கும் தன்மையையும் செமிபாட்டைத் தாமதமாக்கும் மந்தத் தன்மையையும் ஏலம் சீராக்கும் என்கின்றது சித்த மருத்துவம்.

இப்படியான 'படைப்பாற்றலைத் தூண்டும்' எதிர்பார்ப்புகளுடன் இக் கட்டுரையை நீங்கள் வாசிக்க ஆரம்பித்திருந்தால் இனி தலைசுற்றுவது போன்ற உணர்வு தோன்றலாம். அப்படித் தோன்றினால் நீங்கள் தெளிவாக உள்ளீர்கள் என்று அர்த்தம்.

ஏனெனில் இது உணவின் பலன் பற்றியது அல்ல. உணவில் பலன். அதாவது தோசையில் சாஸ்திரம்.

இவ்வருடம் கோடை விடுமுறையின் பொழுது இந்தியா சென்று மதுரைக்கும் விஜயம் செய்த பலருக்கு முன்பின் அறிந்திராத சுவையான தோசை சாஸ்திரமும் சில உணவு விடுதிகளில் சுடச்சுடப் பரிமாறப்பட்டது.

தோசையை பிய்த்துப் பிய்த்து சாப்பிடுவதில் ஒருவரின் குணத்தைப் புரிந்து கொள்ளலாம் எனின் யாருக்குத்தான் தலைசுற்றாது?

நுனி தோசையை முதலில் உண்பவர் அழகுணர்ச்சி அதிகமுடையவர் என்றால் கண்கள் சுழன்று அடுத்தடுத்த மேசைகளை நோட்டம் இடுமா? இல்லையா?

மசால் தோசையை எப்படிச் சாப்பிடுவீர்கள் என்பதன் மூலம் உங்களின் இயல்பையும் தெரிந்து கொள்ள முடிந்தது.

தோசையையும் மசாலாவையும் தனியாகப் பிரித்து உண்பவர்கள் மிகவும் வெளிப்படையாகப் பேசுபவர்கள். இவர்களிடம் ரகஸியம் சொல்லவே கூடாது. சொன்னால் அடுத்த நிமிடம் வெளியே சொல்லிவிடுவார்கள். தொடர்ந்து உரையாடவல்ல சுவாரஸியமானவர்கள்.

தோசையின் ஓரங்களைச் சாப்பிட்டுவிட்டு கடைசியாக நடுவிலிருக்கும் மசாலாவை சாப்பிடுபவர்கள் பொறுமைசாலிகள். எந்தச் செயலையும் யோசித்து நிதான-மாகத்தான் செய்வார்கள். கூச்ச சுபாவம் காணப்படும்.

தோசையைச் சாப்பிட்டுவிட்டு மசாலாவில் மீதம் விடுவோர் சிந்தனையாளர். அதிர்ஷ்டத்தை நம்பாது உழைத்து முன்னேறுவர். இலகுவில் திருப்தி அடையமாட்டார்கள்.

தோசையுடன் மசாலாவையும் மிச்சம் வைக்காது சாப்பிடுபவர் சுலபமாக யாருடனும் பழக மாட்டார்கள். பழகினால் நெருங்கிய நண்பராவர். பின்பு பிரச்சனைப்படின் ஜென்ம விரோதியும் இவர்தான்.

முதலில் நடுவிலுள்ள மசால் பகுதியை முடித்துவிட்டு மிச்சமுள்ள தோசையை மிச்சமின்றி உண்பவர்கள் கவர்ச்சியால் கவரப்படுபவர்கள். ஆடை அலங்காரம் அணிகலன்களில் ஆர்வம் உள்ளவர்கள்.

தோசையை மிச்சம் வைத்துவிடுபவர்கள்... பல நேரங்களில் சோகமாகவே இருப்பார்கள். சின்னப் பிரச்சினை எனினும் நொருங்கிடுவர்.

தோசை.. மசால்.. இரண்டையும் மிச்சம் வைப்பவர்கள் தற்பெருமை மிக்கவர்கள். பொறாமை இருப்பினும் கெட்டிக்காரர். எந்த வேலையையும் சுறுசுறுப்பாகச் செய்து முடித்து விடுவார்கள்.

மசால் தோசையை மிகவும் ரஸித்து ருசித்து உண்பவர்களை நம்பவே கூடாது. சுயரூபத்தை மறைத்து போலியாகப் பழகுவர்.

வேறென்ன சொல்வது - சாப்பிடத் தெரிந்தவர்கள்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலையரசி-2012

யாழ் இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா பெருமையுடன் அளிக்கும் கலையரசி, சனிக்கிழமை, ஒக்டோபர் 06, 2012, மாலை 5.30 மணிக்கு Markham Theatre, 171 Town Centre Blvd., Markham, ON, L3R 8G5 (Highway 7 & Warden Ave) இல் நடைபெறவுள்ளது. அனைத்துப் பழைய மாணவர்களையும், ஆசிரியர்களையும், நலன்விரும்பி - களையும் தமது குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.
தொடர்புகள்: உதயன் நடராஜா: 416-727-9945 புவனேந்திரன்: 905-940-5261 தயாநிதி: 416-421-6469 பாலேந்திரன்: 416-230-5506
www.jaffnahinducanada.com

## பிள்ளைகளற்ற குடும்பங்கள் கனடாவில் அதிகரிப்பு

பிள்ளைகளற்ற குடும்பங்கள் கனடாவின் சனத்தொகையில் காற்பங்கினர் என்று சனத்தொகை புள்ளிவிபரத் திணைக்களம் கடந்த வருட குடித்தொகை கணக்கெடுப்பு மூலம் கண்டறிந்துள்ளது. ஆனால் இத்தொகை மேலும் அதிகமாக இருக்கலாமென மதிப்படப்பட்டுள்ளது. பாரம்பரிய குடும்பமென பார்க்கப்படும் பெற்றோர் அவர்களது சிறிய பிள்ளைகள்/குழந்தைகளைக் கொண்ட வாழ்க்கை முறை மாறிவருவதை இது உணர்த்துகின்றது.

## சைக்கிள்களுக்கும் லைசன்ஸ் அமுலுக்கு வரலாம்!

ரொறன்ரோ நகரசபை எல்லைக்குள் சைகிள்களை ஓட்டுவதற்கு லைசன்ஸ் வழங்கும் திட்டம் அமுலுக்கு வரக்கூடிய சாத்தியமுண்டு. சைக்கிள்களின் தொகையும், அதனால் ஏற்படும் விபத்துகளின் தொகையும் அதிகரித்து வருவதால் லைசன்ஸ் திட்டம் அவசியமென்று வரியிறுப்பாளர்கள் கருதுகின்றனர். முக்கியமாக, வாகனம் ஓட்டுபவர்கள் சைக்கிள்களுக்கு லைசன்ஸ் முறை கட்டாயமென கருத்து வெளியிட்டுள்ளனர். லைசன்ஸ் முறை அமுலாகினால் சைகிள் ஓட்டுபவர்கள் போக்குவரத்து வீதிகளை மீறும்போது அபராதம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.



பொன்னையா விவேகானந்தன்

## மயக்குறு மக்கள் பெற்றார்

28

பிள்ளைச் செல்வத்தைக் கொண்டோரைத் தமிழில் இப்படித்தான் அழைப்பர். மாந்தருக்கு வாய்க்கவல்ல உயர்ந்த பேறுகள் உலகில் பல உள்ளன. ஆயினும் மக்கட்பேறே பெரும் பேறு என்கின்றனர் சான்றோர். பல பெற்றாலும் பெற்றவர் பெற்றோர் ஆகார். பிள்ளைச் செல்வத்தைப் பெற்றோரே 'பெற்றோர்' ஆவர்.

தமிழ் உலகு பிள்ளைப் பேற்றினைப் போற்றி வந்திருக்கின்றது. அறிவு சான்ற பெரியோரும், இலக்கியங்களும் மழலையர் தரும் இன்பத்தை விதந்து கூறியிருக்கின்றன. சங்க இலக்கியங்களில் பல இடங்களில் மக்கட்பேறு பற்றிய அரிய கருத்துகள் செறிந்து கிடக்கின்றன. அவற்றில் ஒன்றை இன்று நோக்குவோம்.

பாண்டியன் அறிவுடை நம்பி, புலவோரையும் மக்களையும் போற்றி வாழ்ந்த மன்னன். நல்லறங்கள் பல செய்து, மக்கள் மனம் கவர்ந்தவன். ஆயினும் இல்வாழ்க்கையில் நாட்டமற்றவனாக இருந்தான். தனக்குப் பின்னான தன் தலைமுறையாகத் திகழக்கூடிய பிள்ளைச் செல்வங்களைப் பற்றியும் பற்றற்று இருந்தான்.

உலகறிவு மிக்க சான்றோரான பிசிராந்தையர், நம்பியின் போக்கைப் புரிந்து கொண்டார். ஒரு மன்னனாக தலைமுறைகளைத் தொடர்ந்து ஆக்கிச் செல்ல வேண்டிய அவசியத்தை நம்பிக்கு உணர்த்தினார். தெளிவுற்ற நம்பி, இல்வாழ்க்கையில் விருப்புற்று மக்கட்பேறு பெற்றான்.
பிள்ளைச் செல்வங்களின் வாயிலாக, பேரின்பம் கண்டான். தான் பெற்ற இணையில்லா இன்பத்தைப் பிறருக்குக் கூற விழைந்தான். கீழ்க்காணும் செய்யுளின் வழி தன் உணர்வை வெளிப்படுத்தினான்.

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே' புறம் 188

பல பல படைப்புகளைப் படைத்துப் பொருள் சேர்த்து, தனித்து உண்ணாது, பலரோடு கூடியுண்பது பெருமகிழ்வு தரும். அதை விட இன்பம் தருவது எது தெரியுமா? குறுகக் குறுக சிறு நடை நடந்து, தம் சிறிய கைகளால் பானையுட் கிடந்த உணவை தரையில் கொட்டியும், கொட்டிய உணவைத் தொட்டுப் பிசைந்தும், சிதறிக்கிடக்கும் உணவை வாயால் கௌவியும், பின் கைளால் அவற்றைப் பரப்பி விளையாடியும், நெய்யோடு கலந்து பொங்கிய சோற்றை உடம்பெல்லாம் பூசிக் குறும்புகள் பல செய்வர். இவ்வாறு தம் சிறு சிறு குறும்புகளால், எம் அறிவை மயக்கி இன்பம் தருகின்ற பிள்ளைகளே வாழ்நாளில் நாம் பெறுகின்ற பெரிய பேறு. இதைவிடப் பெரும் பேறு உயிர்வாழும் மக்களுக்கு இல்லை. இப்படிக் கூறுகின்றான், பாண்டியன் அறிவுடை நம்பி.

பின்னாளில் தோன்றிய வள்ளுவரும்,
"அமிழ்தினும் ஆற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"
என்கின்றார்.

அன்றாட வாழ்வின் களைப்பையும், துயரங்களையும் போக்கவல்ல அருமருந்து, கள்ளங்கபடமற்ற பிள்ளைகளின் முல்லைச் சிரிப்புகளே.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## தமிழர் பலகாரங்களின் கனடியப் பெயர்கள்!

ஸ்காபரோவிலுள்ள தமிழர் உணவகம் ஒன்றில் நடந்தது இது. வாடிக்கையாளர் ஒருவர் இரண்டு ரூபாவுக்கு வடைகள் தருமாறு தமிழில் கேட்டார்.

அங்கு நின்ற இளைஞர் "டுநட்டா அல்லது ஸ்ரோனா" என்று கேட்டார்.

வாடிக்கையாளருக்கு எதுவும் விளங்கவில்லை. மீண்டும் வடை வேண்டும் என்றார்.

புத்திசாலியான இளைஞர் இரண்டு வகை வடைகளையும் எடுத்துக் காட்டி எது வேண்டும் என்று கேட்டார். வாடிக்கையாளருக்குப் புரிந்து விட்டது. 'டுநட்' வடைதான் வேண்டும் என்றார்.

விஷயம் இதுதான். கோடை விடுமுறையில் தந்தையின் உணவகத்தில் மாணவரான மகன் வந்து பணியாற்றிக்கொண்டிருந்தார். தமிழில் பேசுவது அவருக்குக் கஷ்டமாக இருந்தது. அவரைப் பொறுத்தளவில், நடுவில் ஓட்டை துளைத்த உழுந்து வடை 'டுநட்' வடை. கடலையில் பொரித்த உருண்டை வடை 'ஸ்ரோன் வடை'. அவ்வளவுதான்!

வாய்ப்பன், சூசியம், பனங்காய்ப் பணியாரம் ஆகியவைளுக்கு அவர் என்ன கனடியப் பெயர்கள் சூட்டியுள்ளாரோ தெரியாது!

## 46 ஆண்டுக்கு முன்னைய தபால் பொதி மலையுச்சியில்!

இந்தியாவிலிருந்து 46 ஆண்டுகளுக்கு முன்னர் விமானத்தில் கொண்டு செல்லப்பட்ட தூதரகமொன்றுக்குச் சொந்தமான தபால் பொதி, இப்போது பிரான்சின் மலையுச்சியொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அல்ப்ஸ் மலைத் தொடரின் மான்ட் பிளாங்க் என்ற உச்சியில் ஏயர் இந்திய விமானமொன்று 1966 கனவரியில் விழுந்து நொருங்கியது. அப்போது காணாமல் போன தபால் பொதியே இப்போது அகப்பட்டுள்ளது. சில சுற்றுலாப் பயணிகள் இதனைக் கண்டு தகவல் கொடுத்தனர். ஈரமான நிலையில் சில கடிதங்களும் ஆவணங்களும் அதற்குள் இருக்கக் காணப்பட்டன. இந்த விமானத்தில் பயணித்த 117 பிரயாணிகளும் விபத்தில் பலியாகினர்.

## வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி அல்ல!

தமிழ் சினிமாவில் புகழ்பெற்ற பாடல் ஒன்றின் வரிகளே இந்தத் தலைப்பு. இது எங்கள் எழுத்தாளர்கள் சிலருக்குப் பொருந்தும் போலத் தெரிகின்றது.

'மணி'யான அந்த எழுத்தாளர் மணியாகப் பேசுவார் என்று நினைத்துக் காத்திருக்க, மணி (நேரம்) ஓடுவது தெரியாமல் அவர் பேச, கையொலியின் நோக்கம் புரியாமலும்(?) அவர் தொடர, சபையோர் களைத்து விட்டனர்.

தமது அதிமேதாவித்தனத்தைக் காட்ட நினைத்தாரோ என்னவோ, இறுதியில் "இந்த நூல் அதுவா? இதுவா?" என்று போட்டாரே ஒரு போடு! இதுதான் அவரது உரையின் கிளைமாக்ஸ்.

நூலாசிரியர் தமது பதிலுரையின்போது நண்பரைப் பகைக்காது ஒருவாறு சமாளித்து முடித்து விட்டார்.

## அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிறார் தலைவர்

சென்னை அம்பத்தூரில் கடந்த மாத இறுதியில் ஒரு கூட்டத்தில் பேசும்போது மீண்டும் சகோதரச் சண்டையை இழுத்துப் பேசினார் கருணாநிதி.

"இந்தச் சகோதரச் சண்டைதான் ஈழப்பிரச்சனையின் பின்னடைவுக்குக் காரணம்" என்ற வழக்கமான வாய்ப்பாட்டை இங்கும் வாசித்தார்.

"இப்படிப் பேசுவதால்தான் உங்களை ஈழ ஆதரவுத் தலைவர்கள் கடுமையாக விமர்சிக்கிறார்கள். பிறகு ஏன் அதைப்பற்றியே பேசுறீங்க?" என்று அவரிடம் கேட்டார் தி.மு.கவின் முக்கிய பிரமுகர் ஒருவர்.

இங்கு நடக்கிற சகோதரச் சண்டையை (ஸ்டாலின்-அழகிரி-கனிமொழி) தாங்க முடியாமல்தான் இப்படிப் பேசினேன்" என்று சொன்னாராம் மு.க.

**உதாசனன் உலா விருந்து**

தமது குடும்பப் பிரச்சனையையே நேரடியாக் பேசித்தீர்க்க லாயக்கில்லாத நிலைக்கு வந்துவிட்டார் கருணாநிதி என்பதையே இது காட்டுகிறது.

அவலை நினைத்து உரலை இடிக்கும் கதைதான் (நன்றி: ஆனந்த விகடன்)

## தமிழர் பண்பாட்டு இயக்கத்துள் ரகசிய களை பிடுங்கல்?

அண்மையில் தமிழகத்தில் ஒரு மகாநாடு நடத்திய தமிழர் பண்பாட்டு இயக்கத்துள் ஒருவரைக் களை பிடுங்கும் வேலை திரைமறைவில் நடக்கின்றதாம்.

பாண்டிச்சேரியில் நடைறெவிருந்த மாநாட்டின் இடமாற்றம், இறுதியில் தமிழகத்தில் குறுமண்டபமொன்றுள் சின்னக்கூட்டத்தோடு நடத்தி முடித்தது, குறிப்பிட்ட ஒருவரை மேடையேற அனுமதியாதது என்று பல தகவல்கள் காற்றில் வந்து காதில் விழுகின்றது.

என்னென்ன விடயங்களை எவ்வாறு செய்ய வேண்டுமென்ற எல்லா விடயமும் செயலாளர் கணேசருக்கு விலாவாரியாக எடுத்துச் சொல்லப்பட்டுவிட்டது.

கொஞ்சம் கொஞ்சமாக நடைமுறைப்படுத்துவதாக அவர் சம்பந்தப்பட்டவர்களுக்கு உறுதியளித்துள்ளாராம்!

## பெட்டி மாறவில்லை; ஆனால் பொருட்கள் மட்டும்...

மிசிசாகா அன்பர் ஒருவர் கொடிகாமத்திலுள்ள தமது சகோதரிக்கு உடுபுடவைகள் உட்பட சில அன்பளிப்புப் பொருட்கள் அடங்கிய பெட்டியொன்றை 110 டாலர்கள் செலுத்தி தனியார் நிறுவனமொன்றின் ஊடாகக் கடந்த ஏப்ரல் மாதம் அனுப்பியிருந்தார்.

ஒருவாறு அந்தப் பெட்டி கடந்த மாதம் பத்தாம் திகதி உரியவரைச் சென்றடைந்தது. மிகவும் ஆவலுடன் அதனைப் பிரித்தபோது அவர்களுக்குத் தலையைச் சுற்றியது.

காய்ந்த மாம்பழக் கொட்டைகள், கூரை ஓட்டுத் துண்டுகள், அறுந்த சிலிப்பர்கள், கொழும்புப் பத்திரிகைகளின் பிரதிகள் என்று அனுப்பாத பொருட்களால் பெட்டி நிரப்பப்பட்டிருந்ததாம்.

கனடாவிலுள்ள முகவரிடம் முறையிட்டால், ஆயிரத்தில் ஒன்றுக்கு மட்டுமே இப்படி நடப்பதாகக் கூறி கையை விரிக்கிறாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் அ. யோசப் சந்திரகாந்தன் ரொறன்ரோ பல்கலைக் கழகம்

# ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் ஓர் ஆய்வு

கலாசூரி ஆ. சிவநேசச் செல்வன் எழுதிய ***ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள்: ஓர் ஆய்வு - 1930 ஆண்டு வரை*** எனும் நூல் ஈழத்தமிழரின் அரசியல், கல்வி, சமூகவுலகினுள் அச்சுக்கலையின் வருகை பற்றியதும், ஈழத்தில் பத்திரிகையியலின் ஆரம்பகால வளர்ச்சி சார்ந்ததுமான பதிகைகளின் பிழிசாறாகும்.

நூலாசிரியரின் தாயார் அமரர் தெய்வானைப் பிள்ளைக்கும் தந்தையார் அமரர் நாகர் ஆறுமுகத்திற்கும் காணிக்கையாக்கப்பட்டுள்ள இந்நூலுக்கு பேராசிரியர் சபா ஜெயராசா முன்னுரை வழங்கியுள்ளார். அச்சுக் கலையின் வருகையினால் தமிழ்ச் சமூகத்தின் அகநிலைத் தொடர்பாடலில் ஏற்பட்ட அசைவியக்கம் பற்றியும், ஈழத்தவரின் புறநிலைத் தொடர்புகளில் ஏற்பட்ட வாதப்பிரதி வாதங்கள் பற்றியுமான கருத்துப்பொதிந்த அணிந்துரையினைப் பேராசிரியர் சிவத்தம்பி வழங்கியுள்ளார். இயல் ஒன்றில் பத்திரிகைத்துறை பற்றிய இவ்வாய்வின் எல்லையும் பரப்பும் விரிவாகவும் விளக்கமாகவும் ஆய்வறிவு அனுகுமுறைகளுக்கேற்ப நியாயப்படுத்தப்பட்டுள்ளது. அச்சுக்கலையின் தோற்றம் அதன் சமயச் சார்பு, அரசியற்பிரயோகம், சமூகப்பணி சிந்தனையறிவூட்டி தொழிற்பாடு போன்றவற்றுள் அடியொற்றி இவ்வரையறை கோடிடப்பட்டுள்ளது.

அச்சுக்கலை மரபும் பத்திரிகைத்துறையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விளக்கும் இயல் இரண்டு, சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் அச்சுக்கலையின் முத்திரையழியாத சமூகத்தாக்கம் பற்றி விரித்துரைக்கின்றது. இப்பகுதியை வாசிக்கும்போது குலமகள் ராதை படத்திற்குக் கவிஞர் கண்ணதாசன் அச்சுக்கலைபற்றி இரத்தினச்சுருக்கமாக எழுதிய பாடல் நினைவிற்கு வருகின்றது.

உலகம் இதிலே அடங்குது,
உண்மையும் பொய்யும் விளங்குது.
கலகம் வருது.. தீருது அச்சுக்
கலையால் நிலமை மாறுது.

பொய் சொன்னாலும் மெய் சொன்னாலும்
வாயால் சொல்லில் பலனில்லே - அதை
மையிலே நனைச்சுப் பேப்பரில் அடிச்சா
மறுத்துப் பேச ஆளில்லே
எனத் தொடர்கிறது அப்பாடல்.

இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனாவில் ஆரம்பித்த அச்சுக்கலை, 15ம் நூற்றாண்டில் ஜேர்மன் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் பரவிப்படர்ந்து, பின்பு கையியக்க இயந்திரமாக்கப் பெற்று கத்தோலிக்க சமயப் பிரசார நோக்குடன் தமிழகத்தில் அறிமுகம் செய்யப்பட்டதைக் குறிப்பிடும் ஆசிரியர், இந்தியாவில் முதன் முதலாக அச்சுருப்பெற்றது தம்பிரான் வணக்கமம் எனும் தமிழ்க் கிறீஸ்தவ நூல் என்பதனையும் பெருமையுடன் பதிவு செய்கின்றார். 1578ம் ஆண்டில் திருநெல்வேலியில் புன்னனக்காயல் எனும் ஊரில் அச்சிடப்பட்ட இந்நூலின் பிரதி இன்று அமெரிக்காவின் ஹாவாட் பல்கலைக்கழக நூலகத்தில் பாதுகாப்பாக உள்ளதனையும் கூறிச் செல்கின்றார். தேடுதற்கரிய பல முக்கிய வரலாற்றுத் தகவல்கள் இப்பகுதியில் தேர்ந்து தெளிந்து தேக்கப்பட்டுள்ளன.

ஈழத்தமிழ்ப் பத்திரிகைகள் தொடர்காலத்திலிருந்தே சமயக்குருக்களினாலும், துறவிகளினாலும் மதக்கல்வியூட்டலுக்காகவும், மதப்பிரசாரம் மற்றும் மதமாற்றம் போன்றவற்றின் கருவியாகவும் பிரயோகப்படுத்தப்பட்டமை மூன்றாவது இயலில் ஏராளமான பல தரவுகள் தகவல்களுடன் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கிடையிலான காரசாரமான கருத்துப்பரிமாறுதல்கள் வாசகர் கடிதங்களூடாக அக்காலத்திற்கேற்ப பேச்சு வழக்கு முறையில் உரைநடையா-கியமை இப்பகுதியில் வார்த்தையுருவில் வார்க்கப்பட்டுள்ளன பல உதாரணங்களினூடாக இவற்றை ஆசிரியர் இங்கு எடுத்துக்காட்டியுள்ளார். தமிழ் உரைநடை வரலாற்றில் அச்சுருவாக்கம் ஏற்படுத்திய தாக்கம்பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு இப்பகுதி மிகப்பயனுடையதாகும். பல்சமயச் சமூக வாழ்வு நெறியினூடாக சமயாகளின் மனப்போக்குள், விவாதங்கள், சமயக் கோட்பாடுகளில் வளர்ச்சி மற்றும் சமயமொழி பெயர்ப்புச் சிக்கல்களைப் பற்றிய சிந்தனைக்குரிய பல கருப்பொருட்கள் இந்த இயலில் நிறையவே உண்டு.

இயல் நான்கிலே பத்திரிகைகளும் அவற்றின் அரசியல் பின்னனி பற்றியும் அலசி ஆயப்பட்டுள்ளது. குமாரசுவாமி முதலியார், சைமன் காசிச் செட்டி போன்ற தமிழ்ச் சான்றோர் பத்திரிகைளினூடாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதியவை மக்கள் மத்தியில் ஆங்கிலேய அரசியல் பொருண்மியச் சுரண்டல் பற்றியும் இன்னும் அரசியல் உரிமையின் அவசியம் ஆகியவை பற்றியும் 19ம் நூற்றாண்டில் பத்திரிகைகள் ஏற்படுத்திய விழிப்புணர்வையும் இப்பகுதி பதிகை செய்கின்றது.
ஒரு சில பத்திரிகைகள் சமயச் சார்புடன் இயங்கி வந்தபோதிலும், அவை துணிவோடு ஆங்கிலேய அரசின் சில போக்குகளை விமர்சித்து மக்களின் உரிமைக்கு குரல் கொடுத்தமையை இப்பகுதியில் சமயப்பாகுபாடுகளுக்கப்பால் குத்திட்டுக்காட்டியுள்ளார்.

19ம் நூற்றாண்டின் நடுக்கூற்றிலிருந்து ஆங்கிலேய அரச அதிகாரிகள் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களின் தலைவர்கள் கொண்டிருந்த உறவின் விரிசல்களையும் முறிவுகளையும் இம்மூவினத்தாரும் எவ்வாறு சேர் பொன் இராமநாதர் எனும் தமிழரைப் படித்த இலங்கையர்களின் பிரதிநிதியாக் தெரிவு செய்தார் என்பதையும் பத்திரிகை ஆசிரியர் பல கருத்துருக்களை உதாரணங்காட்டி ஒரு அரசியல் வரலாற்று விரிவுரைபோன்று தொகுத்தளித்துள்ளார்.

பத்திரிகைகளும் சமூகப்பின்னணியும் எனத் தலைப்பிடப்பட்டுள்ள இயல் ஐந்து, அக்காலத்தில் மலிந்திருந்த சமூகச் சீர்கேடுகள், சிக்கல்கள், சீதனக்கொடுமைகள் மதுபாவனை போதைப்பொருள்நாடல் என்பவற்றை பத்திரிகைகள் சமய பேறுபாடுகளுக்கப்பால் ஒருமித்த மனத்துடன் கண்டித்துத் திருத்த விழைந்த மையைக் குறித்துக் காட்டுகின்றது. 19ம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தின் அவலங்களை இப்பகுதி ஓரளவு படம்பிடித்துக் காட்டுகின்றது. ஆக்க இலக்கிய வளர்ச்சிக்கும், உரைநடை மரபின் உயர்ச்சிக்கும் பத்திரிகைத் துறை எவ்வாறு கைகொடுத்ததென்பதனை இயல் ஆறு, ஈழத்தமிழியல் வரலாற்று வளர்ச்சியினூடாக விளக்கப்பட்டுள்ளது.

இதுவரை கேட்பியத் தன்மையோடிருந்த பல இலக்கியச் செல்வங்கள் அச்சுக்கலையின் வருகையினால் எவ்வாறு காண்பியத் தன்மைக்கு மாற்றம் பெற்றன என விரித்துக்காட்டப்பட்டுள்ளது. சமயப் பரம்புதலின் ஊடகமாகத் தொடங்கிய அச்சுக்கலை எவ்வாறு கால வளர்ச்சியில் கல்வியுலகின் பன்முகத் தேவைகளை உள்வாங்கி ஆரம்ப இலக்கிய வளர்ச்சிக்கு படியமைத்துக் கொடுத்தென்பதும் அப்போது புகழ் பூத்த பத்திரிகையாகவிருந்த இலங்கை பாதுகாவலன், இலங்கை நேசன், உதயதாரகை, புதினாதிவதி சன்மார்க்கபோதினி ஆகிய பத்திரிகைகளை உதாரணாக காட்டி நிறுவப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கிய வடிவங்களாகிய சிறுகதை, கதை, நாவல், புதினம், போன்றவையின் வளர்ச்சிக்கு பத்திரிகைகளினூடாக வளர்ந்த உரைநடை மரபு எவ்வாறு உந்துசக்தியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# இகழ நினைக்காத இலக்கியவாதிகள்

விலங்கு இனத்திலே நன்றிக்கு இலக்கணமாகக் கொள்ளப்படுவது நாய்' அது போல இழிபிறப்பாகக் கொள்ளப்படுவதும் நாய்தான்' படித்தவர்கள் முதற்கொண்டு பாமரர்கள் வரை நாய்களை நன்றிக்கு உதாரணம் காட்டியதை விட இகழ்ச்சிக்கே அதிகமாக எடுத்துப் பேசியிருக்கிறார்கள்' திருவாசகத்திலே நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத் தாயில் சிறந்த தயவான தத்துவனே என்பார் மாணிக்கவாசகர்' நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை என்பார் இன்னோர் இடத்தில்' திருவாசகம் முழுவதும் நாய் என்ற பதம் பரவி வருகின்றது இழிவுப் பொருளில்'

இறைவன் பித்தா பிறை சூடி என்று அடியெடுத்துக் கொடுத்த பாடலைப் பாடி முடித்துக் கொண்டு இரண்டாவது பாட்டிலேயே நாயேன் பலநாள் நினைப்பின்றி மனத்துன்னை என்று தொடங்கி விடுகிறார் சுந்தரர்'

குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டிலே அடைத்து வைத்து
மிக்கதோர் மஞ்சள் பூசி மிகுமணம் செய்வித் தாலும்
அக்குலம் வேறது ஆமோ அதனிடம் புனுகு உண்டாமோ
குக்கலே குக்கல் அல்லால் குலந்தனில் பெரியது ஆமோ
என்று பேசும் விவேக சிந்தாமணி'

குக்கல் என்று அழைக்கப்படும் நாய்க் குலத்தை வாசனைத் திரவியமான புனுகைத் தருகின்ற நாவி என்று சொல்லப்படும் புனுகுப் பூனை வாழ்கின்ற கூட்டிலே அடைத்து வைத்து மஞ்சள் பூசி மணம் வீச வைத்து உயர்வு செய்தாலும் அதனிடம் இருந்து புனுகு வராது. எப்பவும் நாய் நாய்தான்' அந்தக் குலத்துக்கு உயர்வு வராது' என்று கடுமையாகப் பேசும் விவேக சிந்தாமணி'

இனிக் கம்பரும் நாயை விட்டு வைக்கவில்லை' இராவணன் முதல் நாள் போரிலே தோல்வி அடைந்து இருந்த போது தன்னைப் பார்க்க வந்த பாட்டன் மாலியவானுக்கு மனம் நொந்து ஒரு கருத்தைச் சொல்வதாக கம்பர் ஒரு பாடல் எழுதினார்.

போயினித் தெரிவதென்னே பொறையினால் உலகம் போற்றும்
வேயெனத் தகைய தோளி இராகவன் மேனி நோக்கி
தீயெனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டால்
நாயெனத் தகுதும் அன்றே காமனும் நாமும் எல்லாம்'
தாத்தா' இனி என்ன சொல்ல இருக்கிறது? நெருப்புப் போல களத்திலே பகைவரைச் சுட்டெரிக்கும் இராமனின் வீரத்தை நான் பார்த்தேன். அப்படிப்பட்ட வீரன் ஒருவனுக்கு மனைவியாக இருக்கும் சீதைக்கு மன்மதனும் நானும் நாய்க்குச் சமம். அவள் என்னை விரும்ப மாட்டாள் என்பதனை இன்று கண்டு கொண்டேன் என்று இராவணன் சொல்வான்' இஙகேயும் இழிவுக்கு கம்பர் எடுத்துக் கொண்டது நாய்'

பாஞ்சாலி சபதம் பாடிய பாரதியார் பாண்டவர்களைச் சூதாட்டத்திலே துரியோதனன் கூட்டம் வென்ற பொழுது பொறுக்க முடியாமல் விதுரன் கவலைப்பட்டதாக ஒரு கவிதை சொன்னார்.
அங்கம் நொந்து விட்டான் - விதுரன்
அவலம் எய்தி விட்டான்
சிங்கம் ஐந்தை நாய்கள் - கொல்லும்
செய்தி காணல் உற்றே'

சிங்கத்தை நாய் எப்படிக் கொல்லலாம்? என்ற இழிவு மனப்பான்மை பாரதிக்கும் வந்து விடுகின்றது. அதனால் நாய் இங்கும் இழிவுப் பொருள் பெற்று விடுகின்றது. கவிஞர் கண்ணதாசன் கூட சினிமாப் பாடல் ஒன்றிலே கையில் வைத்துக் காத்திருந்தால் காலடியில் காத்திருக்கும் நன்றிமிக்க நாய்கள் உள்ள நாடு என்று எழுதினார்' இவ்வாறு நாய் பல இடங்களில் பலராலும் இழித்துரைக்கப்பட சில இலக்கிய ஆசிரியர்கள் மட்டும் நாயை உயர்வாகவோ அன்றி இழிவாகவோ எந்த இடத்திலும் கையாளாமல் விட்டிருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர் ஔவையார். மற்றவர் அவரோடு சம்பந்தமுடைய திருவள்ளுவர்'

நீதி நெறியைப் போதிக்க வந்த இருவரும் மிகவும் சுலபமாக பயன்படுத்தியிருக்கக் கூடிய உதாரணம் நாய்' இருவருமே நன்றியைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்' அங்கே நாயைக் கொண்டுவந்தால் தவறு இருக்காது. ஆனால் பயன்படுத்தவில்லை' அது போல இழி மக்களைப் பற்றிக் கயவர் தீயார் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அங்கும் நாய் கொண்டுவரப்படவில்லை'

காளமேகப் புலவர் தன்னை எடி என்று சொன்னதற்காக ஔவை அவரைத் திட்டி ஒரு பாடல் சொன்னாள்.
எட்டேகால் இலட்சணமே எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டக்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாய் அது

என்பது ஔவையின் பாடல்' இதிலே எமனேறும் பரி எருமை' பெரியம்மை வாகனம் மாடு இராம தூதுவன் குரங்கு' எல்லாம் கோபத்தில் வந்து விடுகின்றன' ஆனால் நாய் என்ற வார்த்தை வரவில்லை' நிச்சயமாக வந்திருக்க வேண்டிய இடம் அது. கோபத்திலும் ஔவை நாயைக் கொண்டு வரவில்லை'

திருவள்ளுவரை எடுத்துக் கொண்டால் கான முயல் எய்த அம்பு என்று முயலைக் கையாளுவார். ஆவுக்கு நீரென்று இரப்பினும் என்று பசுவைப் பயன்படுத்துவார்' புலி தாக்குறின் என்று புலியைப் பயன்படுத்துவார்' பொருதகர் என்று ஆட்டுக் கடாவைப் பற்றிப் பேசுவார் பரியது கூர்ங்கோடது என்று யானை பற்றிப் பேசுவார்' ஒலித்தக்கால் என்னாம் எலிப்பகை என்று எலியைக் குறளுக்கு கொண்டு வருவார் மயிர் நீர்ப்பின் வாழாக் கவரிமான் என்று மானைத் தொட்டுக் காட்டுவார்' மடல்மா என்று குதிரையின் குறிப்பும் வரும்' ஆனால் எந்த இடத்திலும் நாய் என்ற வார்த்தை திருக்குறளில் இல்லை'
ஏன்? இவர்கள் இருவரும் உற்ற நோய் நோற்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை ஆகிய தவ நெறியிலே வாழ்ந்தவர்கள்' நாயாக இருந்தாலும் அதை இகழ்ந்து பேச அந்தச் சான்றோர்கள் அறிவு இடம் தரவில்லை' அதைப் புகழவும் அவர்கள் முயலவில்லை' காரணம் சில ஈனத் தனங்கள் நாயிடமும் உண்டு. ஆனால் அதைச் சுட்டிக் காட்டவும் அவர்கள் விரும்பவில்லை. அப்படியே விட்டுவிட்டார்கள்' நாய் மட்டுமல்ல இழி வழிப் படரும் எந்த விலங்கும் ஔவை வள்ளுவர் என்ற இரு புலவர் பெருமக்களாலும் எடுத்தாளப் படவில்லை'

முல்லைக்குத் தேரைக் கொடுத்தான் பாரி' புறாவுக்கு உடலைக் கொடுத்தான் சிபி' மயிலுக்குப் போர்வை கொடுத்தான் பேகன்' என்றெல்லாம் படிக்கின்றோம்' ஆனால் நாய்க்கு வள்ளுவரும் ஔவையும் செய்த நன்றியும் இந்தக் கொடைகளுக்கு எந்த விதத்திலும் குறைந்தது அல்ல என்பதே உண்மையாகும்'●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# கியுபெக்: மறுக்கப்பட்ட பிரிவினை

கனடாவில் மீண்டும் பிரிவினைக்காக ஓங்கி ஒலிக்கவிருந்த குரலை, ஒரு சில ஆசனங்களால் மறுக்கப்பட்ட பெரும்பான்மைப் பலம் சற்றே தணிய வைத்திருக்கிறது. கடந்த செப்ரம்பர் 4ம் திகதி கியுபெக் மாநிலத்தில் இடம்பெற்ற தேர்தல், கனடிய அரசியல் ஸ்திரத்தன்மைக்கு விடுக்கப்பட்ட பெரும் சவாலாகப் பார்க்கப்பட்டதுடன், பிரிவினை-வாதம் கோரும் கட்சி அறுதிப் பெரும்பான்மை பெறும் பட்சத்தில், கனடிய நாட்டின் இறைமைக்கும் பெரும் கேள்விக்குறியாக நோக்கப்பட்டது.

தொடர்ந்து மூன்று தடவை கியுபெக் முதல்வராக இருந்த லிபரல் கட்சியின் ஜான் சாரே, தனது நான்காவது ஆட்சிக்காலத்திற்கு மக்களிடம் ஆணை கோரினார். இருப்பினும், கியுபெக் மாநி-லத்தின் தனித்தன்மையும் மொழிப்பலமும் அதிகாரங்களும் திட்டமிட்டே மழுங்கடிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டிய எதிர்க் கட்சியான பார்ட்டி குபேக்குவா, தமக்கு பெரும்பான்மைப் பலத்தைத் தரும்படி மக்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

ஸ்ரீபன் ஹார்ப்பர் தலைமையிலான கனடிய அரசிற்கு மிகப் பெரும் குழப்பத்தை உருவாக்கிய கியுபெக் தேர்தல், எதிர்பார்த்த அதிரடித் தனியாட்சிக் கோரிக்கை எதுவும் உடனடியாகக் கிளம்பாத வகையில் நடந்து முடிந்திருக்கிறது.

பார்ட்டி குபேக்குவா கட்சியில் போட்டியிட்ட போலீன் மருமா தனது கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் பட்சத்தில், கியுபெக்கை தனிநாடாகப் பிரிப்பதற்கான வாக்கெடுப்பு உட்பட, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாகவே ஆரம்பிக்கப்போவதாக பகிரங்க அறிவிப்பு விடுத்தார். பிரெஞ்சு மாநிலம் கனடாவிலிருந்து பிரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நீண்டகாலமாக உரக்கக்கூவிவரும் தேசியவாதிகள், மகிழ்ச்சியுடன் தங்கள் உச்சக்கட்டப் பரப்புரையை முன்னெடுத்தனர்.

64 ஆசனங்களைத் தன்வசம் வைத்திருந்த லிபரல் கட்சி, தேர்தலில் 50 ஆசனங்களை மட்டுமே தக்க வைக்க முடிந்தது. எனினும், திடீரென உருவான இறுதிநேர லிபரல் கட்சி ஆதரவாளர்களின் ஆக்ரோசமான வாக்களிப்பு, இந்த 50 ஆசனங்களை உறுதிசெய்ததால், பார்ட்டி குபேக்குவாவுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பெரும்பான்மைப் பலம் தவிர்க்கப்பட்டது.

63 ஆசனங்களைப் பெற்றால் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்க முடியும் என்ற நிலையில், 54 ஆசனங்களை மட்டுமே பார்ட்டி குபேக்குவா கட்சியால் பெற முடிந்தது. கியுபெக் மாநி-லத்திற்கான அதிக அதிகாரங்கள், மொழியுரிமை, குடிவரவு தொடர்பான மேலதிக அதிகாரங்கள் போன்றவை உட்பட, தொழிலாளர் மற்றும் தொழிலக காப்புறுதி போன்ற பல கோரிக்கைகளையும் மத்திய அரசிடம் முன்வைக்கவிருப்பதாக புதிய கியுபெக் முதல்வர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இன்னும் சில ஆசனங்களைப் பெற்று பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருந்தால் உருவாகியிருக்கக்கூடிய அபத்தங்கள் தவிர்க்கப்பட்டாலும், கியுபெக் பிரிவினைவாதத்தை ஆதரிக்கின்ற பிறிதொரு மூன்றாம்நிலைக் கட்சி, 19 ஆசனங்களை வென்றிருப்பதையும் உதாசீனம் செய்ய முடியாது. பார்ட்டி கியுபெக்குவாவின் கட்சிக் கொள்கைகளை, மூன்றாம் நிலைக் கட்சியான கோலின் அவ்னி கியுபெக் என்றழைக்கப்படும் எதிர்கால கியுபெக் கூட்டணி ஒட்டுமொத்தமாக ஆதரிக்காமை ஒரு சாதகமான சூழ்நிலையாகப் பார்க்கப்பட்டாலும், பிரிவினைவாதத்தை முன்வைத்து இரு கட்சிகளும் பின்னர் இணைந்து குரல் எழுப்பும் பட்சத்தில், அது கனடிய அரசிற்கு மிகப்பெரிய சவாலாக உருவெடுக்கலாம். எந்தவொரு கட்சியுடனும் தனது கட்சி கூட்டணி அமைத்துக்கொள்ளாது என்று கோலின் கட்சி கூறியதால், தற்போது பாரிய பிரிவினைவாதக் கூக்குரல்கள் எழும்பாது என்று எடுத்துக்கொண்டாலும், அரசியலில் கூட்டணி மாற்றங்கள் எல்லாம் சகஜமே என்ற வகையில், நாளடைவில் மீண்டும் பிரிவினைவாதக் குரல்கள் உச்சம் பெறலாம்.

ஆக, கனடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹார்ப்பர், கியுபெக் மாநிலம் தொடர்பான தனது பாராமுகத்தை மாற்றிக்கொண்டு, ஒன்றுபட்ட கனடா தொடர்பான தனது கொள்கைகளை மீள்பரிசீலனை செய்வது அவசரமும் அவசியமுமென கனடிய மைய ஊடகங்கள் சுட்டிக் காட்டுகின்றன. ஆட்சி அதிகாரங்களை மாநிலங்களுடன் போதிய அளவு பகிர்ந்து கொள்வதே தனது இலக்கு என்று, பிரதமர் நாற்காலியில் அமர்ந்த நாளிலிருந்து ஹார்ப்பர் கூறிவந்தாலும், அது தொடர்ந்து பேச்சளவிலேயே இருக்கிறது என்று சாடுகிறது குளோப் அன்ட் மெய்ல் பத்திரிகை.

மாணவர்களுக்கான கல்வி நிதியை உயர்த்துவதாக கடந்த பெப்ரவரி மாதத்தில் ஜான் சாரே அறிவித்ததால் அங்கு எழுந்த மாணவர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், நாளடைவில் மொன்றியல் உட்பட பல நகரங்களுக்கும் பரவியதால், மாணவர் எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல், ஆயிரக் கணக்கில் மாணவர்களைக் கைது செய்வதும், பின்னர் விடுவிப்பதுமென நாட்கள் கடந்தன. கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவ ஒன்றியங்களும் யூனியன்களும் இணைந்து கொண்டதால் மாணவர் எதிர்ப்பு, வன்முறைப் போராட்டங்களாக வலுப்பெற்றது. வேறு வழியின்றி மாநிலங்களவையைக் கலைத்து, தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார் ஜான் சாரே. பார்ட்டி குபேக்குவா தனது சார்பில், மாணவர்களின் வாக்குகளைக் குறிவைத்து காய் நகர்த்தியது. தான் வெற்றிபெற்றால், மாணவர் கல்வி கட்டணவுயர்வை மீண்டும் குறைப்பதாக தேர்தல் வாக்குறுதி வழங்கினார். அவரது வாக்குறுதி மாணவர் சமூகத்தின் ஒட்டுமொத்த ஆதரவையும் அவருக்கு வழங்கியது.

தற்போது தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்த போலின் மருவா ஆட்சி ஏற்றதுமே, தனது பிரதான வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறார். மாணவர்களது கல்விக் கட்டண உயர்வை ரத்துசெய்து, மாணவ சமூகத்தின் ஆதரவைத் தமதாக்கியிருக்கிறார்.

திடீரெனத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்ததால், 35 நாட்கள் மட்டுமே பிரசாரத்தை முன்னெடுக்க முடிந்ததால், ஆளும் லிபரல் கட்சிக்கு அது சாதகமாக அமைந்ததாக ஒரு சாரார் கருத்துக் கூறினாலும், கனடிய மத்திய அரசின் கியுபெக் மாநிலம் குறித்த அசமந்தப் போக்கே, பார்ட்டி குபேக்குவாவுக்கு மக்கள் ஆதரவை அதிகரித்திருக்கிறது என்கிறார்கள்.

கடந்தகால வரலாற்றின்படி, சிறுபான்மை ஆட்சியெதுவும் இரண்டு வருடங்களுக்கு மேல் கியுபெக்கில் தாக்குப்பிடிக்க முடியவில்லை என்பதால், பெரும்பான்மைப் பலத்தைக் கோரி, பார்ட்டி கியுபெக்குவா ஓரிரு வருடங்களில் தேர்தலுக்கு அழைப்பு விடுத்தால் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை என்கிறார்கள் அரசியல் அவதானிகள்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# தரமும் திறமும்

திறமான ஆசிரியர்கள் ஒரு கல்லூரியிற் கடமையாற்றின் தரமான மாணவர்களை உருவாக்கலாம். தரமும் திறமும் (திறமையும்) ஒரு தங்க நாணயத்தின் இரு பக்கங்கள், ஒரு தராசின் இரு தட்டுகள்.

பிரிட்டிசார் தயாரிக்கும் எப்பொருள்களும் தரமானவை, திறமானவை. எந்தத் துறையிலும் இந்த முத்திரை அவர்களின் உழைப்புக்குக் கிடைத்த பரிசு. Made in England எனப் பொறிக்கப்பட்டிருந்தால் போதும் நம்பி வேண்டலாம். வாகனங்கள், வண்டியிலிருந்து உடுபுடைவைகள் என பிரிட்டிஷாரின் தயாரிப்பும், வெளியீடும் உலகப் புகழ் வாய்ந்தன.

ஒவ்வொரு பிரஜையும் எதிர்பார்ப்பது சிறந்த பொருள்களையும் நீண்டகாலம் பாவிக்கும் பொருளையும். காசுக்கேற்ற பெறுமானம் இருக்கும். தரத்திலே குறைந்த பொருள்களுக்குச் சந்தையிலே மார்க்கெற் இருக்காது. சில ஆளுமைகள் சில நாட்டவர்க்கும் சொந்தம். இந்த copy right ஒன்றே நல்ல சான்று. ஓட்டுமொத்தமாகக் கணித்தால் தரமும், திறமும் உலகச் சந்தையிலே செல்வாக்குடையன.
ஒரு மண்குடத்தைத் தட்டிப்பார்த்தாலே புரியும்; இந்தக் கணிப்பு வரும். எடை, நிறை, கனம் காத்திரம் என்று அவதானிப்பின் தரமும், திறமையும் ஒரு கட்டளைக்கல். கல்வியோடு மட்டும் இது தொடர்புடையது மட்டுமன்றி, ஒவ்வொரு விடயங்களிலும் தரத்துக்கும், திறத்துக்கும் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதைப் பாரதியார் சுண்டிப் பார்த்து ஒரு பாடல் அடியிலே வெளியிட்டுள்ளார்.

'திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்ய வேண்டும்.' 22. (தமிழ் 5.)
நோபல் பரிசு பெறுமளவுக்கு திறமை பரிசைப் பெறலாம். எனவே 'இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்ற வேண்டும்' எனப் பாரதி விழைந்தார். நூலாக்கத் துறையின் வெற்றியின் மேல் வெற்றி நமக்கெய்த வேண்டுமெனப் பாரதிதாசன் சிந்தித்தான்.

கைத்திறச் சித்திரங்கள்
கணிதங்கள் வானநூற்கள்
மெய்த்திற நூற்கள் சிற்பம்
விஞ்ஞானங் காவியங்கள்
வைத்துள தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தக சாலை யெங்கும்
புதுக்குநாள் எந்நாளோ.

தாயெழிற் றமிழை எங்கள்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறு மதுவின் ஆறு
தொடர்ந்தென்றன் செவியில் வந்து
பாயுநாள் எந்நாளோ
ஆரிதைப் பகர்வாரிங்கே
பாரதிதாசன்

மொழிவழிச் சிந்தனையைக் கொஞ்சம் பின்னாடிச் சிந்திப்பின் ஆங்கிலேய விற்பனராய் இருந்த தமிழ் அறிஞர்கள் முன்வரிசையில் நிற்கின்றனர். ஸ்ரீநிவாச சாஸ்திரிகள், இலட்சுமண சுவாமி அய்யர், ஜி.ஜி பொன்னம்பலமென்று பலரின் திருநாமங்கள் கொடி கட்டிப் பறந்தன.

அந்தத் தரத்தில் உலகம் போற்றும் மொழி வல்லாளர்கள் மதிப்புக்குரியவர்கள். ஜெகசிற்பியரைப் படித்த மேதைகள் சேக்ஸ்பியர் நாகலிங்கம், சேக்ஸ்பியர் சுப்பிரமணியம் என அழைக்கப்பட்டனர். பன்மொழிப் புலவர்களாக தாயகத்தில் தனிநாயகம் அடிகளார், தாவீது அடிகளார் போன்றோர் துலங்கினர். வெளிநாடுகளில் வதியும் ஈழத்தமிழினம் தமிழையும் இழந்து பக்குவம் மிக்க பண்பாடு நாகரிகம், கலை கலாசாரம் என்பவற்றை மெல்ல மெல்ல இழப்பது சிந்தனைக்குரியது அன்றோ. எனவே நாம் தரமான, தமிழ் ஞானத்தைப் பெற்று நம் தாய்மொழியைப் பேண வேண்டும் அன்றோ.
மொழி நம்மை வளர்க்க வேண்டிய காலகட்டத்தில் நாம் நடைபோடுகிறோம். நம்மை நாமே எடைபோட்டுப் பார்த்து ஒரு செம்மொழி நிலைக்கு நம்மையுயர்த்த வேண்டுமன்றோ. இலகு நடை, எளிமையான நடை, கிராமிய நடையென்று போய் உள்ளதைக் கெடுத்த நிலை. இங்கிலீசுத் தமிழும் சினிமாத் தமிழும் நம்மை ஆட்கொள்கின்றன. எனவே நாம் திறமான தமிழ் எழுதுவோம். தமிழின் தரத்தைக் குறையாமற் திறமாய் எழுதுவோம். முதல் மொழியறிவில் நம்மை வளர்ப்போம். சிறந்த அளவு சுத்தமாய் எழுதுவோம். வாசகர் வட்டத்தை அதற்குத் தயார் செய்வோம்.

ஈழத்தமிழரின் மொழிநடையைத் தென்தமிழ்நாடே போற்றியது. இதிலே தனித்தும் ஒருமித்தும் அமுற்படுத்துவோம். நாவலரே தமிழ், வசன நடையை அறிமுகம் செய்தார். எனவே அவரை 'வசனநடை கைவந்த வல்லாளன்' எனப் போற்றினர். இன்று புதுமுகங்கள் அறிமுகமாயின. எங்கே எப்படி மாறினும் யாழ்ப்பாணத்தமிழ் தடம் புரள விடக்கூடாது. எனவே நம் மொழிவளத்தைப் பல்லாற்றானும் பாதுகாப்போம் செழிப்படையச் செய்வோம்.

இலக்கணச் சுத்தம் தெளிவை உண்டாக்கும். எனவே நாம் செப்பமான மொழியறிவைப் பெற்று மொழிவளம் பேணுவோம். தமிழ்ப் பெரியார்கள் தரமான மொழியறியவைப் பெறுங்கள், தரமாக எழுதுங்கள், பேசுங்கள் எனக் கூறுகிறார்கள். கீழ் வகுப்பில் இருந்து மேல் வகுப்புவரை இலக்கண மொழியறிவை அறிமுகப்படுத்தி நல்ல தமிழ்ச் சந்ததியை உருவாக்குவது நம் கடமையாம். தரமான எழுத்தாளர் உருவாக வேண்டும். தரமான மொழிநடையை அறிமுகம் செய்வோமாக. வருமுன்னர் காப்போம். வருந்தடைகட்கு முகம் கொடுப்போம்.

எங்கள் மொழியும் எங்கள் வாழ்வும்
மங்காத் தமிழென் றேகும்மி கொட்டுவோம்
பாரதிபகர் ந்தது போலகுருடர்களாய்ச் செவிடர்
களாய் வாழோம் புதுமை பரப்பி புகழுடன் வாழ்வோமாக.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி.வி.ஐ வருடாந்தக் கொண்டாட்டம் - 2012









ரி.வி.ஐ தமிழ் தொலைக்காட்சி நிறுவனத்தின் வருடாந்த கொண்டாட்டம் நிகழ்ச்சி கடந்த மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளில் இன்டர்நாஷனல் சென்டரில் இடம்பெற்றது. விழாவில் இடம்பெற்ற சில நடன நிகழ்ச்சிகளின் படத்தொகுப்பு இங்கு இடம்பெற்றுள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ. சிவநேசச்செல்வனின் ஆய்வு நூல் அறிமுகவிழா

வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகக் கடமையாற்றிய கலாசூரி ஆ. சிவநேசச்செல்வனின் 'ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் - ஓர் ஆய்வு' நூலின் அறிமுகவிழா கடந்த மாதம் 7ஆம் திகதி ஸ்காபரோ சிவிக் சென்டர் மண்டபத்தில் நடைபெற்றது. திரு. சாமி அப்பாத்துரை விழாவுக்குத் தலைமை தாங்கினார். பல்வேறு உரைகளையடுத்து நூலின் முதற் பிரதி கனடாவின் முதலாவது பெண் பத்திரிகையாளர் என்னும் வகையில் செந்தாமரை ஆசிரியர் திருமதி. ராஜி அரசரத்தினம் அவர்களுக்கு வழங்கிக் கௌரவம் செய்யப்பட்டது.












# முன்னாள் அதிபர். பொ. கனகசபாபதியின் இரு நூல்கள் வெளியீடு



தெல்லிப்பளை மகாஜன கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதியின் 'எம்மை வாழ வைத்தவர்கள்', 'மரம் மாந்தர் மிருகம்' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு வைபவம் கடந்த மாதம் 8ஆம் திகதி மார்க்கம் நகர மண்டப அரங்கில் நடைபெற்றது. பல்துறைப் பிரமுகர்கள் ஆய்வுரைகள் நிகழ்த்தினர். திரு. கதிர் துரைசிங்கம் விழாவை நெறிப்படுத்தினார். நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் சிறப்புரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து நூலாசிரியரின் பதிலுரை இடம்பெற்றது. (ஒளிப்படங்கள்: நினைவுகள்.கொம்)














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வன்னி அன்பு இல்ல பராமரிப்புக்காக 'ஈழநாடு' நடத்திய இசை விருந்து

போரினால் பாதிக்கப்பட்டு அநாதரவான நிலையிலுள்ள சுமார் 180 குழந்தைகளைப் பராமரித்து வரும் வன்னி அன்பு இல்ல நிதிக்காக 'ஈழநாடு' நடத்திய இசைவிருந்தும் இராப்போசன விருந்தும் கடந்த மாதம் 23ஆம் திகதி ஸ்காபரோ பிரின்சஸ் விருந்தினர் மண்டபத்தில் நடைபெற்றது. தென்னிந்திய பிரபல பாடகர் உன்னி கிருஷ்ணனின் இன்னிசை சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. அவருடன் உள்ளூர் இளம் கலைஞர்களும் இணைந்து பாடல்களை வழங்கினர். வர்த்தக சம்மேளனத் தலைவர் மைக் அகிலன் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றினர். சிவசிறீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்களின் ஆசியுரை, பேராசிரியர் யோசப் சந்திரகாந்தனின் சிறப்புரை, சரா மாஸ்டரின் அன்பு இல்லப் பிள்ளைகளின் தேவைகள் பற்றிய உரை ஆகியவற்றுடன் கனடிய மாணவிகளின் சிறப்பு நடனங்கள் இடம்பெற்றன. கலைஞர்கள் சிறப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஈழநாடு ஆசிரியர் ரி. கே. பரமேஸ்வரன் நிகழ்ச்சியின் நோக்கத்தையும் அதன் பின்னணியையும் விபரித்து நன்றியுரை வழங்கினார். மண்டபம் நிரம்பி வழிந்த ஆர்வலர்களின் பங்களிப்புடன் நல்லதொரு நோக்கத்துக்கான நிகழ்ச்சியாக வைபவம் நிறைவேறியது.
















ஒளிப்படங்கள்:
'செய்தி' குணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிலி மைந்தன் சி. சண்முகராஜாவின் கவிதை நூல் வெளியீடு




மாவிலி மைந்தன் சி. சண்முகராஜாவின் 'வைகறை வானம்' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த மாதம் 22ஆம் திகதி ஸ்காபரோ கந்தசாமி கோவில் மண்டபத்தில் முன்னாள் கல்வி அதிகாரி சு. சிவநாயகமூர்த்தி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. ஆசியுரை, வாழ்த்துரைகள், சிறப்புரை, ஆய்வுரைகள், இன்னிசைப்பாடல், வெளியீட்டுரை ஆகியவைகளை அடுத்து நூலாசிரியர் ஏற்புரையைத் தொடர்ந்து முதற் பிரதியை வைத்திய கலாநிதி கிருபா குமாரசாமி பெற்றுக் கொண்டார்.












ஒளிப்படங்கள்:
**துஷி**











*You are invited*

**Tamil Mirror** தமிழ் மிரர்

MIRROR THAT REFLECTS THE TAMIL COMMUNITY

Friday, 2012
**19**
OCTOBER

*Gala Night 2012*

*Dinner & Dance*

**Scarborough Convention Centre**
**20 Torham Place, Scarborough**

**416 697 0126**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன்



# மூன்றும் நான்கும்

59

எமது முன்னோர்கள் எமக்கு அளித்த செல்வங்களில் இலக்கியச் செல்வம்தான் தலையானது. ஆங்கில மொழி தோன்று முன்னரே தமிழில் இலக்கண நூல்கள் தோன்றிவிட்டன. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப் பாட்டுக்கு இணையான இலக்கியம் வேறு மொழிகளில் கிடையாது. எட்டுத்தொகை பத்துப்பாட்டு தொகுத்த பாடல்களாகும். எட்டுத்தொகையில் மொத்தம் 2,329 பாக்கள் உண்டு. பத்துப்பாட்டில் 3,548 அடி அளவு உண்டு. தொகுக்காது விடுபட்ட பாடல்கள் எமக்கு இன்று கிடைத்தில. அவை அழிந்து பட்டன. இது எமது தவக் குறைவு.

பொதுவாக பண்டைய தமிழக பண்பாட்டையும் வாழ்வியல் முறைகளையும் பெருமைகளையும் காண இப்பாடல் தொகுதிகள் நமக்குப் பெரிதும் துணை புரிகின்றன. சஙக இலக்கியத்தை வெளியுலகைப் பார்க்கும் சாளரத்துக்கு ஒப்பிடலாம். தமிழருக்கு அகம் எனும் காதல் ஒழுக்கமும் புறம் எனும் பெருமித வெளிப்பாடுகளுமே முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருளாக அமைந்தமை இப்பாடல் தொகுதிகளால் தெரியவரும்.

இலக்கியம் என்ற பாடத்தில் மட்டும் எமது முன்னோர் நூற்றுக்கு நூறு புள்ளி வாங்கியிருக்கிறார்கள். வேறு அறிவியல், கணக்கு, இயற்பியல், வேதியல் போன்ற பாடங்களில் சொற்ப புள்ளிகளே வாங்கியிருக்கிறார்கள்.

ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறோம்.

நாலு ஸ்ரீ நாலடியார் என்னும் தமிழ்நூல்.
இரண்டு ஸ்ரீ இரண்டு அடிகளாலான திருக்குறள்.

இந்த இரண்டும் அறம் அல்லது நீதி பற்றிய நூல்கள். பாடல் அடி ஒட்டி நாலடி, இரணை அடி என குறிக்கப்பட்டன.

ஆனால் இலக்கியத்தில் மூன்றும் நான்கும் பற்றிக் கேள்விப்பட்டவர்கள் குறைவு என்று நினைக்கிறேன்.

சங்க இலக்கியங்களாக தொல்காப்பியம், பதினெண்மேல்கணக்கு, பதினெண்கீழ்கணக்கு ஆகியவைகளை வகைப்படுத்தி உள்ளனர். இவை ஒவ்வொன்றிலும் பதினெட்டு நூல்கள் என முப்பத்தாறு நூல்கள் உண்டு.

இந்த பதினெண் மேற்கணக்கினை இருபிரிவுகளாக எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு என பகுத்து, எட்டுத்தொகை என்னும் பிரிவில் அய்ங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, பரிபாடல், பதிற்றுப் பத்து என்பவைகளை தொகுத்துள்ளனர்.

பத்துப்பாட்டின் கீழ் திருமுருகாற்றுப்படை, குறிஞ்சிப் பாட்டு, மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, பெரும் பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை ஆகியவைகளைத் தொகுத்துள்ளனர்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி அய்ம்பது, அய்ந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்ற பதினெட்டு இலக்கியங்களாகத் தொகுத்துக் கொடுத்துள்ளனர்.

இப்பதினெட்டு நூல்களுள் பதினொரு நூல்கள் மட்டுமே நீதி நூல்கள் ஆகும். அவையாவன (1) திருக்குறள் (2) நாலடியார் (3) நான்மணிக்கடிகை, (4) இனியவை நாற்பது (5) இன்னா நாற்பது (6) திரிகடுகம் (7) ஆசாரக் கோவை (8) சிறுபஞ்சமூலம் (9) பழமொழி (10) முதுமொழிக் காஞ்சி (11) ஏலாதி என்கிற பதினொரு நூல்களும் நீதிநூல்களாகும்.

ஆறு நூல்கள் அக நூல்களாகும். (1) கார் நாற்பது (2) ஐந்திணை ஐம்பது (3) ஐந்திணை எழுபது (4) திணை மொழி ஐம்பது (5) திணை மாலை நூற்றைம்பது (6) கைந்நிலை ஆகிய ஆறு நூல்களும் அக நூல்களாகும்.

புறத்திணை நூல் களவழி நாற்பது என்ற ஒரு நூல் மட்டுமே.

இந்த நூல்களில் வடசொற்களும் பிற்கால இலக்கணக் கூறுகளும் காணப்படுகின்றன. பழைய இலக்கியத்தின் கருத்தும், சொல்லும் தொடர்களும் புலவர்களால் எடுத்தாளப்படுகின்றன.

இந்த நூல்கள் தமிழகத்தில் சங்கம் மருவிய காலகட்டத்தில் இயற்றப்பட்டதாக (கிபி 300 - கிபி 600) எண்ணப்படுகிறது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எவை என்பதை ஒரு பாட்டிலும் சொல்லி வைத்துள்ளார்கள்.

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூல
மின்னிலைசொல் காஞ்சியு டனேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

நிறைந்த அடிகளைக் கொண்டவைகளை பதினெண் மேற்கணக்கு நூல்கள் எனவும் குறைந்த அடிகளைக் கொண்டவைகளை பதி-னெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டது. மேலும் இந்நூல்கள் எழுதிய கால வரிசையினைக் கொண்டும் இவ்வாறு பிரிக்கப்பட்டதாகக் கருதுவோரும் உண்டு. கீழ்க்கணக்கு நூல்கள் அய்ந்தடியினேறாத செய்யுட்கள் அறம் பொருள், இன்பம் ஆகியவற்றுக்கு இலக்கணம் கூறும்வழிப் பிற பொருளும் இடையிடை தாவிச் செல்லச்சில எழுத்தாற் சிலவாக வருதலால் என்பதே.

மேற்கணக்கு நூல்கள் போலல்லாது கீழ்க்கணக்கு நூல்கள் சங்கப் பாடல்களின் பிழிவாகவும் எளிமையும் இனிமையும் பொருண்மையும் கொண்டு விளங்குகின்றன. திருக்குறள் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும். தமிழில் முதலில் எழுதப்பட்ட நூலும் திருக்குறளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலேயுள்ள பாடலில் கடுகம் என்பது திரிகடுகத்தையும் நான்மணி என்பது நான்மணிக் கடிகையையும் குறிக்கும். திரிகடுகம் மும்மூன்று கருத்தைக் கூறும். நான்மணிக்கடிகை நந்நான்கு கருத்தைக் கூறும். எனவேதான் நாலும் இரண்டும் போல இவை மூன்றும் நான்கும் என அழைக்கப்படுகிறது. முன்னது அடிகளாலும் பின்னது கருத்தாலும் பகுக்கப்பட்டுள்ளன.

திரிகடுகம் என்ற நூலை எழுதியவர் நல்லாதனார் ஆவர். ஆதன் என்பது இயற்பெயர். பண்பாளராகவும் இனியவராகவும் இருந்தமையால் நல்லாதனார் என அழைக்கப்பட்டிருக்கலாம். கடவுள் வாழ்த்தில் பூவைப்பூ வண்ணனை (திருமாலை) பாடியிருப்பதால் இவர் வைணவ சமயத்தவராக இருக்கலாம் என எண்ண இடமுண்டு. திரிகடுகத்தில் கடவுள் வாழ்த்தோடு 101 பாடல்கள் உண்டு.

திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பலி ஆகியவற்றால் செய்யப்பட்ட நல்ல மருந்து. உடலுக்கு நலம் பயப்பது. அது போல ஒவ்வொரு பாடலிலும் மும்மூன்று நல்ல கருத்துக்களை வைத்துப் பாடியிருப்பதால், இந்நூல் திரிகடுகம் எனப் பெயர் பெறலாயிற்று. இந்த நூலுக்குக் கோட்டியூர் இராமாநுச்சாரியார் உரை எழுதியுள்ளார். அவர் எழுதிய உரையே மிகுதியும் பயிலப்பட்டு வருகிறது.

நான்மணிக் கடிகையின் ஆசிரியர் விளம்பிநாகனார் ஆவார். நாகனார் என்பது இவரது இயற்பெயர். விளம்பி என்பது இவரது ஊர்ப் பெயராகும். நல்லாதனார் போலவே கடவுள் வாழ்த்தில் மாயவனைப் போற்றுவதால் இவர் வைணவ சமயத்தவராக இருக்கலாம்.

நான்மணிக் கடிகை என்றால் நான்கு மணிகளால் கோர்க்கப்பட்ட மாலை என்பது பொருள். ஒவ்வொரு பாடலிலும் நான்கு சிறந்த கருத்துக்களைப் பெய்து எழுதப்பட்டிருப்பதால் நான்மணிக் கடிகை எனப் பெயர் பெற்றுள்ளது. இந்த நூலில் 104 வெண்பாப் பாடல்கள் அடங்கியுள்ளன.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத வாழ்வியல் கோட்பாடுகள் பற்றி இந்த நூல்கள் பேசுகின்றன. எமது முன்னோர்கள் மொழிக்கு மட்டுமல்ல வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துள்ளார்கள். திருக்குறள், நாலடியார் போன்ற நூல்கள் மட்டுமல்ல திருமந்திரம் போன்ற நூல்களும் முழுக்க முழுக்க வாழ்வாங்கு வாழக் கற்றுக் கொடுக்கும் அற நூல்களாகும். திருக்குறளில் அறம் என்ற சொல் 'ஒழுகுநெறி' என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. இல்லறம் துறவறம் இரண்டையும் நெறி என்றே வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

எமது முன்னோர்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத அறத்துக்கு அல்லது ஒழுக்கத்துக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். கல்வி, செல்வம், வீரம் ஒழுக்கத்துக்குப் பின்னால் வைக்கப்பட்டது. காரணம் ஒழுக்கம் இல்லாத கல்வி, ஒழுக்கம் இல்லாத செல்வம், ஒழுக்கம் இல்லாத வீரத்தால் ஆக்கம் இல்லை. அழிவுதான் உண்டு.

அடுத்த முறை திரிகடுகம் மற்றும் நான்மணிக்கடிகை இரண்டிலும் உள்ள பாடல்களைப் பார்ப்போம்●


(தொடரும்)




பா(f)ன்ஸி பூக்கடை

Fancy Florist

பூஜைக் களஞ்சியம்



**Fancy Florist International Inc.**
**An International Flower Shop**

*We deliver Garlands, jasmine and gifts anywhere in the world on the date you select when placing orders through our three on-line Flower Shops.*

**To send jasmine, garlands and gifts**
**Anywhere in Canada**
**Place the order on line at Flower shop**
**www. fancyflorist.ca**
**Phone: (416)288-1419**
***In Canada, the local pick up is at***
**5633 Finch Ave, East, Unit # 6,**
**Scarborough, Ont. M1B 5K9**

**To send jasmine, garlands and gifts**
**Anywhere in USA**
**Place the order on line at Flower shop**
**www. fancyflorist.com**
**Phone: (716) 838-0844**
***In USA, the local pick up is at***
**2119, Eggert Road**
**Amherst, NY, 14226**

**To send jasmine, garlands and gifts**
**Europe, Middle East, India, Sri Lanka**
**Singapore, Malaysia**
**Place the order on line at Flower shop**
**www.fancyflorist.in**
**Phone: (716) 838-0844**
***In India, the local pick up is at***
**12 Ghandhi St, BT Nagar,**
**Gerugambakkam, Chennai**

*Place the order in any one of our three on-line Flower Shops to send temple garlands to your favorite temple in Canada, USA, India, Sri Lanka, Singapore and Malaysia*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என். செல்வராசா (நூலகவியலாளர்)

# ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின் எழுந்த குரல்கள் - 3

இருப்பும் விருப்பும் என்ற கட்டுரைத் தொகுதி கி.பி.அரவிந்தன் எழுதியது. சென்னை, மடிப்பாக்கம், சாளரம் வெளியீடாக ஜுன் 2009இல் வெளிவந்தது. 1990களில் புலம்பெயர்ந்த ஈழத்துக்கவிஞராக அதிகம் அறியப்பட்டவர் கி.பி.அரவிந்தன் என்னும் கிறிஸ்தோப்பர் பிரான்சிஸ். தோழர் சுந்தர் என்றும் ஈரோஸ் இயக்க விடுதலைப் போராளியாக அறியப்பட்டவர். தற்போது புலம்பெயர்ந்து பிரான்சில் வாழ்பவர். இவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். **தமிழகம் இந்நூலை கைகளில் ஏந்தட்டும்** என்ற வைகறையின் முன்னுரையான அறிமுகக் கட்டுரையுடன் **இது அணிந்துரை அல்ல தோழர்களே** என்ற தலைப்பில் பாமரன் எழுதிய உணர்வுபூர்வமான கட்டுரையும், **அப்படித்தானா அரவிந்தன்?** என்ற கே.எம்.வேணுகோபாலின் கட்டுரையும் இத்தொகுதிக்கும் அதன் படைப்பாளி கி.பி.அரவிந்தனுக்குமான விரிவான அறிமுகத்தை வழங்குகின்றன. உள்ளே உள்ள கி.பி.அரவிந்தனின் பத்துக் கட்டுரைகளும் முறையே இருப்பும் விருப்பும், ஒற்றுமையை ஓதுவோருக்கு, காலம் அரித்திடாது எம் இணைப்பை, எங்கள் நினைவுகளை உங்களிடம் கையளித்துள்ளோம், இலங்கையில் இன்னொரு போரை நாங்கள் விரும்பவில்லை, சாத்வீகப் பாதையில் சந்தி பிரித்தவன்: பொன்.சிவகுமாரன், யாசர் அரபாத்: ஒரு முடிவுறாத வரலாறு, ஓர் அகதியின் தாயும் தாயகமும், ஒரு பயணமும் சில நினைவுகளும், அகதியாகவே வாழ்ந்துவிட்டுப் போகிறேன் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

ஆயதப் போராட்டத்தின் முடிவில் எழுந்த அரசியல் அலைகள் பல நூல்களை தமிழில் கொண்டுவந்து சேர்த்துள்ளன. வழமைபோல இதுவும் இலங்கைத் தீவுக்கு வெளியே தமிழகம், மலேசியா, லண்டன் ஆகிய நாடுகளிலிருந்தே உருவாகியுள்ளன.

முள்ளிவாய்க்கால் வரை ஈழத்தமிழர் கண்ட அவலங்களை புகைப்பட ஆவணமாக்கும் முயற்சியின் ஒரு வெளிப்பாடாக என்ன செய்யலாம் இதற்காக? என்ற நூல் அமைகின்றது. தமிழகத்தைச் சேர்ந்த ஜெ.பிரபாகரன் என்பவர் தொகுத்து, மதுரை பென்னிகுயிக் பதிப்பகத்தினரால் அக்டோபர் 2010 இல் 216 பக்கங்களுடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையில் அரை நூற்றாண்டிற்கும் மேலாக சிங்கள இனவெறிக்கு ஆளாகிவரும் ஈழத்தமிழின மக்களின் துயரக்காட்சிகள் என்ற தலைப்புடன் புகைப்பட ஆவணமாக இந்நூல் தமிழ் ஆங்கில பிரெஞ்சு விளக்கக்குறிப்புகளுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் 57 தலைப்புகளில் 371 புகைப்படங்கள், 4 அட்டவணைகள் மற்றும் 80 மனிதநேயக் கூற்றுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. புகைப்படங்களை வகைப்படுத்தும் தலைப்புக்கள் தமிழ் ஆங்கிலம் பிரெஞ்சு மொழிகளிலும் தலைப்பின் தொடர்ச்சி அடுத்தடுத்த பக்கங்களில் தமிழில் மட்டும் வெளியிடப்பட்டுள்ளது. பிற அனைத்தும் தமிழ் ஆங்கில மொழிகளில் முழுமையாக இடம்பெற்றுள்ளன. இந்நூல் முதற்பதிப்பில் 2000 பிரதிகள் தமிழகத்தில் அச்சிடப்பட்டு சர்வதேச விநியோகத்தின் ஓரங்கமாக கப்பல்வழியாக கனடாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டபோது, இலங்கைத் துறைமுகத்தில் தடுக்கப்பட்டு இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேமாதிரியான ஆவணமாக மற்றொரு நூலும் குறிப்பிடப்படலாம். தமிழினப் படுகொலைகள் 1956-2008 என்ற இந்நூல் வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் என்ற அமைப்பினால் NESOHR சென்னையிலிருந்து மனிதம் வெளியீடாக 2009இன் இறுதிப்பகுதிகளில் வெளியிடப்பட்டது. 360 பக்கங்களில் புகைப்படங்கள், அட்டவணைகள் சகிதம் இந்நூல் வெளிவந்துள்ளது. 1956 முதல் 2008 வரையிலான அரைநூற்றாண்டுக் காலகட்டத்தில் ஈழத்தமிழர்களின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப்படுகொலைகள் இப்பாரிய ஆவணத்தில் விரிவாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. 160க்கும் மேற்பட்ட படுகொலைகளின் சம்பவ விபரிப்பு, பாதிக்கப்பட்டோரின் புகைப்படங்கள், படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்ற பிரதேசங்களின் வரைபடங்கள், வீடுவீடாய் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்கள், படுகொலைக்கு உட்பட்டோரின் பெயர், வயது, தொழில் போன்றவை மிக விரிவாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. 2009 இல் அயர்லாந்து- டப்ளின் நகரில் நடைபெற்ற படுகொலைகள் குறித்த மகாநாட்டில் நீதிபதிகளால்-நம்பிக்கைக்குரிய ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில நூலின் தமிழ்வடிவம் இதுவாகும்.

இலங்கையில் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தின் முடிவில் கடந்துவந்த பாதையில் நாம் மேற்கொண்ட தவறுகள் எதிர்காலத்தில் எவ்வாறு விடுதலைப்போராட்டம் முன்னெடுக்கப்படலாம் என்பன போன்ற கருத்துகள் பரவலாக ஊடகங்களில் ஆங்காங்கே வெளிவந்திருந்த போதிலும் அதனை ஒரு நூருலுருவில் முதலில் வெளியிட்ட வகையில் வடிவங்கள் மாறலாம் போராட்டம் தொடரும்: ஒரு சமூகவியல் ஆய்வு என்ற நூல் குறிப்பிடத்தக்கது. தமிழகத்திலிருந்து கைமண் என்ற புனைபெயரில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. லண்டனிலிருந்து மறுநிர்மாணம் என்ற சமூகவியல் ஆய்வு மையம் இந்நூலை 347 பக்கங்களில் ஜுலை 2011 இல் வெளியிட்டுள்ளது. "இயக்கம் என்பது வெறுமனே ஒரு அல்லது சில தனிநபர்களோ நிறுவனங்களோ அல்ல. இயக்கத்தினதும், இயக்கத்தின் தலைமையில் அணிதிரண்டு போராடிய மக்களினதும் தியாகங்கள் என்றுமே வீண்போகாது, ஒடுக்கப்பட்ட மக்கள் அதை வீண்போக விடமாட்டார்கள். ஆழ்மனப்படிமங்கள் பௌதிக வடிவம்பெறும். புதிய தலைமை உருவாகும். போராட்டம் தொடரும்" என்ற கருத்தை மையப்படுத்தி இந்நூல் ஈழவிடுதலைப் போராட்டத்தின் முள்ளிவாய்க்கால் வரையிலான ஆயுதப் போராட்டத்தின் முடிவின் பின்னையதான புதிய சிந்தனைக் கருத்துக்களை தர்க்கரீதியில் பதிவுசெய்கின்றது. அரசியல் காரணங்களுக்காக நூலாசிரியரின் இயற்பெயரும் வெளியீட்டு நிறுவனத்தின் முகவரியும் நூலில் பதிவுசெய்யப்படவில்லை. இந்நூல் யுத்தத்தின் உடனடிக் குறிக்கோள்கள், யுத்தகாலப் பேரழிவுகள், மகிந்த சிந்தனையும் பொருளாதாரக் கட்டுமானமும், இராணுவக் கட்டுமானமும் மகிந்த சிந்தனையும், மகிந்த சிந்தனையும் இராஜதந்திரமும் ஆகிய பிரிவுகளின்கீழ் ஆய்வுசெய்யப்பட்டுள்ளது.

Sri Lanka Killing Fields என்ற தலைப்பில் பிரித்தானிய தொலைக்காட்சி சேவைகளில் ஒன்றான Channel 4, 14.6.2011இல் 49 நிமிட ஆவணப்படமொன்றை ஒளிபரப்பியிருந்தது. இலங்கையில் 2009 மே 17இல் முள்ளிவாய்க்காலில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் போரின் போது நிகழ்ந்த பொதுமக்களின் கொடுமையான அழிவு பற்றிய செய்தியை உலக அரங்கில் எடுத்துச்செல்ல இவ்வாவணப்படம் உதவியது. அவ்வாவணப்படத்தைத் தழுவி

(அடுத்த இதழிலும் வரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

Main Square Dental Office

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

Dr. Shan - Thursday (morning)
Dr. Yao San (Tue, Fri & Sat
Dr. Brian (monday)
Dr. May (wednesday)

**(416) 690 0121**

# Computek College

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

Est. 1991

**www.computek.edu**

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome



**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor


**416-431-3600** Ext:2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..




- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5


Put your logo on anything!



One stop for all your promotional needs.
PROMAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

*Why think so long...?*



- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements


**Homelife/Future**
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

Vivek Subramaniam
Sales Representative
416-898 4846

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# B20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி

| | |
|---|---|
| **Group A** | **Group B** |
| **Group C** | **Group D** |
| A1: England | B1: Australia |
| C1: Sri Lanka | D1: Pakistan |
| A2: India | B2: West Indies |
| C2: South Africa | D2: New Zealand |
| Q2: Afghanistan | Q1: Ireland |
| Zimbabwe | Bangladesh |

நான்காவது b20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இம்முறை இலங்கையில் நடைபெறுகிறது. முதன் முறையாக ஆசியாவில் நடத்தப்படும் போட்டி இதுவாகும்
.

இதற்கு முன்னர் நடைபெற்ற மூன்று போட்டிகளில் முதல் போட்டி 2007ஆம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவில் நடைபெற்றது. இதில் இந்திய அணி சாம்பியன் பட்டம் பெற்றது.
இரண்டாவது போட்டி 2009ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் அணி சாம்பியனானது.
மூன்றாவது முறையாக கடந்த 2010ஆம் ஆண்டில் மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற போட்டியில், இங்கிலாந்து அணி சாம்பியனானது.

தற்போது நான்காவது முறையாக நடத்தப்படும் இப்போட்டியில் 12 நாடுகள் ஏ, பி, சி, டி என்று 4 பிரிவுகளில் பங்கேற்கின்றன.
இத்தொடர் செப்டெம்பர் 18ஆம் திகதி தொடங்கியது ஒக்டோபர் 7ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இத்தொடருக்கு தெரிவான 12 அணிகளில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் 10 அணிகள் நேரடியாக தெரிவானது. மீதமுள்ள இரண்டு அணிகளுக்காக தகுதிச்சுற்று நடைபெற்றது.
இதற்காக அமெரிக்கா, இத்தாலி, அயர்லாந்து போன்ற 16 அணிகள் மோதின. இதில் முதல் இரு இடங்களைப் பிடித்த அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் அணிகள் உலகக் கிண்ணச்சுற்றுக்கு தகுதி பெற்றன.

இத்தொடர் இலங்கையின் பல்லேகல மைதானம், கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானம், ஹம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்சே மைதானம் ஆகிய மூன்று இடங்களில் நடைபெறுகின்றது. இத்தொடரின் விளம்பரத் தூதுவராக இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளர் லசித் மலிங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்தொடரில் முக்கிய ஆறு அணிகள் உள்ளன. சாம்பியனான இங்கிலாந்து அணி, சக்தி வாய்ந்த மேற்கிந்திய தீவுகள், அதிக பலம் வாய்ந்த தென் ஆபிரிக்க அணி மற்றும் ஆசியாவின் முதல் மூன்று அணிகளான இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சிறீலங்கா அணிகள் ஆகியவை ஆகும்.
பங்கேற்கும் அணிகள் மற்றும் அணித்தலைவர்கள்:
ஜிம்பாப்வே(பிரெண்டன் டெய்லர்) தென் ஆப்ரிக்கா (டிவில்லியர்ஸ்) பாகிஸ்தான் (மொஹமது ஹபிஸ்)
இந்தியா (மஹேந்திர சிங் டோனி) அவுஸ்திரேலியா (ஜார்ஜ் பெய்லி) இலங்கை (மஹேல ஜெயவர்த்தன) மேற்கிந்திய தீவுகள் (டேரன் சம்மி) அயர்லாந்து (போர்டர்பீல்டு) வங்கதேசம் (முஷ்பிகுர் ரஹிம்) நியூசிலாந்து (ராஸ் டெய்லர்) ஆப்கானிஸ்தான் (நவ்ரோஸ் மங்கள்)

டென்னிஸ் தரவரிசையில் பெடரர், அசரென்கா தொடர்ந்து முதலிடம் சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர், வீராங்கனைகளின் தரவரசைப்பட்டியலை சர்வதேச டென்னிஸ் வாரியம் வெளியிட்டுள்ளது.

ஆடவர் பிரிவில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் தொடர்ந்து முதலிடத்திலும், நோவக் ஜோக்கோவிச் இரண்டாமிடத்திலும், ஆண்டி முர்ரே மூன்றாமிடத்திலும், ரபேல் நடால் நான்காமிடத்திலும் காணப்படுகின்றனர்.

மகளிர் பிரிவில் பெலாரசின் விக்டோரியா அசரென்கா தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகின்றனர். ரஷ்யாவின் மரியா ஷரபோவா இரண்டாமிடத்திலும், அக்னிஸ்கா ரட்வன்ஸ்கா மூன்றாமிடத்திலும் உள்ளனர்.

மகளிர் பிரிவில் சமீபத்தில் அமெரிக்க ஓபன் டென்னிஸ் சாம்பியன் பட்டத்தை வெற்றிகொண்ட அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் தொடர்ந்தும் 4ம் இடத்திலேயே காணப்படுகிறார்.
வெளியிடப்பட்டுள்ள தரவரிசை முடிவுகள்:

| ஆடவர் தரவரிசை: | மகளிர் தரவரிசை: |
|---|---|
| ரோஜர் பெடரர் | விக்டோரியா அசரென்கா |
| நோவக் ஜோகோவிச் | மரியா 'ரபோவா |
| ஆண்டி முர்ரே | அக்னிஸ்கா ரட்வன்ஸ்கா |
| ரபேல் நடால் | செரினா வில்லியம்ஸ் |
| டேவிட் பெரர் | பெட்ரா குவித்தோவா |
| தொமஸ் பேர்டிச் | ஏஞ்ஜெலிக் கெர்பர் |
| ஜோ வில்பிரட் சொங்கா | சாரா எரானி |
| ஜுவன் மார்ட்டின் டெல் பொட்ரோ | லீ நா |
| ஜங்கோ ரிப்சரவிக் | சமந்தா ஸ்டோசர் |
| ஜோக் இஸ்னர் | மரியன் பார்ட்டோரி |



Get more from your home by paying less each month
Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer
Scotiabank
You're richer than you think.
Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மூளைக்கு நிகரான 'சிப்" உருவாக்கம்

அறிவாற்றல் உடைய கணினி (Cognitive Computing) தொழில்நுட்பத் துறையில் புதிய பரிணாமமாக மனித மூளையின் செயற்பாடுகளை ஒத்த முன்மாதிரி 'சிப்' உருவாக்கியுள்ளதாக ஐ.பி.எம். நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த 'சிப்' ஆனது மனிதர்களின் மூளையைப் போல தரவுகளை செயன்முறைப்படுத்தக்கூடியது. சூழலை உணர்தல், இலக்குகளைத் தெரிந்துகொள்ளல், சுற்றுவட்டாரத்துடன் தொடர்புகொள்ளல், சிக்கலான தரவுகளை உணர்ந்து கொண்டு சரியான பதிலை வழங்குதல் ஆகியவையே இதன் தயாரிப்புக்கான முக்கிய நோக்கமென ஐ.பி.எம். தெரிவிக்கின்றது.

செயற்கை நுண்ணறிவின் (artificial intelligence) அடிப்படையாக இதன் உருவாக்கமானது திகழுமென ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். இதனை உருவாக்கும் திட்டமானது 100 ஆராய்ச்சியாளர்களின் பங்குபற்றுதலுடன் சுமார் 6 வருடங்களாக நடைபெற்றுள்ளது. இதற்காக ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சித் திட்டங்களுக்கான முகவர் நிலையம் சுமார் 41 மில்லியன் அமெரிக்க டாலர் வரை நிதியுதவியளித்துள்ளது. ஐ.பி.எம். அமைப்பும் இதற்கு நிதியுதவியளித்துள்ளது.

---

வந்தமைந்ததென்பதும் இங்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (28 ஆம் பக்கம் வருக)

## ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள்...

இறுதியாக இயல் ஏழு, இலங்கையில்1930ம் ஆண்டுவரை வெளிவந்த தமிழ்ப்பத்திரிகைகளின் பட்டியலைத் தாங்கி நிற்கின்றது. பத்திரிகை தொடங்கப் பெற்ற காலமும், அவ்வவ் பத்திரிகையில் முதல் ஆசிரியரின் பெயரும் தரப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்குத் துணைநிறை நூல்களின் பட்டியலுடன் நூல் நிறைவு பெறுகின்றது.

ஈழத்தினதும் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பொற்காலப் பேராசான்கள் எனக் கொள்ளப்படுகின்ற பேராசிரியர்கள் க. கைலாசபதி, சு. வித்தியானந்தன், கா. சிவத்தம்பி, கா. இந்திரபாலா ஆகியோரின் வழிகாட்டலிலும் நெறிப்படுத்தலிலும் இவ்வாய்வினைத் தொடங்கிய நூலாசிரியர் இவர்களை நன்றியுணர்வுடன் குறிப்பிடும் இடங்களை வாசித்தபோது 1980களின் ஆரம்பத்தில் இப்பெருமனிதர்களுடன யாழ்பல்கலைக் கழகத்தில் நான் இளம் விரிவுரையாளராகப் பணியாற்றியதும், இதேகாலத்தில் இந்நூலாசிரியர் அங்கு தமிழ்த்துறை விரிவுரையாளராகவும் நூலக உதவியாளராகவும் பணியாற்றிய பசுமையான நினைவுகள் மனதிலே இதமாக இனித்தது.

(ஸ்காபறோவில் நடைபெற்ற மேற்படி நூல் அறிமுக விழாவில் நிகழ்த்தப்பட்ட

## தமிழர் தகவல் இதழ்களைத் தபாலிலும் பெறலாம்

தமிழர் தகவல் மாத இதழ்களையும் பெப்ரவரி மாதத்தில் வெளிவரும் ஆண்டு மலரையும் தபாலில் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இதனைப் பெற விரும்புபவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்தில் தங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பெயரையும் பதிவு செய்தால் தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.
அல்லது tamilsinfo@sympatico.ca
என்ற மின்னஞ்சலுக்கு விபரங்களை அனுப்பலாம்.

**416.920.9250**

HERITAGE Education Funds

**RESP SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

Graphic Land - 647. 219. 7576



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer


வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**35 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**

3030 Markham Road
Scarborough, ON

**416-412-3838**
**416-836-5825**




எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

69

வெள்ளிப் பணத் தொடரில் இம்முறை கனடாவில் தமிழ்ச்சமூகம் கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவமும் கனடாவின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் கல்வி வகிக்கும் பங்களிப்புப் பற்றியும் பார்க்கலாம்.

கல்வி என்பது மனித சமுதாயத்தின் நீண்டகால முதலீடு. இதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள் தமிழ்ச்சமூகம். காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்து தமிழ் மக்கள் தாயகத்தில் அரசாங்க பதவிக்காகவும், சமுதாயத்தில் உயர்ந்த கௌரவத்தினை கொடுக்கும் ஒரு கருவியாகவும் பார்க்கப்பட்டதால் இதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

இன்று புலம்பெயர்ந்த கனடா நாட்டில் இதன் தொடர்ச்சியாக பெற்றோர்கள் வார நாட்களில் மாலையிலும் வாரஇறுதி நாட்களில் காலை மாலை முழுவதும் தமது பிள்ளைகள் தனியார் கல்வி நிலையங்களுக்கும் மற்றும் பாடத்திட்டத்துக்குட்படாத தனிமனித ஆளுமையை விருத்தி செய்யும் தமிழ்க்கல்வி, நடனம், இசைப்பயிற்சி, சமயக்கல்வி தற்பாதுகாப்புக்கலை எனப் பல்வேறு வகைப்பட்ட கல்விக்கு அழைத்துச் செல்வதை காண்கிறோம்.

இன்று ரொறன்ரோவிலும் அதனைச் சூழவுள்ள உபநகரங்களிலும் கனடிய கல்வித் திட்டப் பாடங்களை கற்பிக்கும் தனியார் கல்விக் கூடங்களும் மற்றும் தமிழ்க் கலாசாரத்துடனிணைந்த இசை, நடனக் கல்லூரிகளின் எண்ணிக்கை 1980க்கு முன்பு யாழ்ப்பாணத்தில் எவ்வாறு தனியார் கல்வி நிலையங்கள் காணப்பட்டதோ அதேபோன்ற ஒரு நிலை இங்கும் காணப்படுகின்றது. இதுமாத்திரமல்ல பலர் தனிப்பட்ட முறையில் தமது வீட்டு நிலவறைகளை (Basement) கல்வியூட்டல் நிலையங்களாக மாற்றி ஒரு குடிசைத் தொழிலாக (Small business) செய்து கொண்டிருக்கிறார்கள். தரமான கல்வியை பெற்று அதனை மற்றவர்களுக்கு சிறந்த முறையில் கற்பிக்கத் தெரிந்தவர்களுக்கு இன்று ரொறன்ரோவில் வேலையில்லாப் பிரச்சனை இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லையென்றே கூற முடியும்.

இவ்வாறு கனடிய தமிழர்களின் பொருளாதார இயங்குநிலை காணப்படுகின்ற நிலை ஒருபுறம் இருக்க கனடிய தேசிய பொருளாதாரத்தில் கனடாவின் கல்வி ஏற்றுமதிபற்றி நோக்குவோம்.

கல்வி ஏற்றுமதி என்னும் சொற்பிரயோகம் சிலருக்கு புதிதாக இருக்கலாம். கல்வி ஒரு பொருளா ஏற்றுமதி செய்வதற்கு எனக் கேள்வியெழலாம். வெளிநாட்டு மாணவர்கள் இங்கு வந்து கல்வி கற்றுச் செல்லும்போது அது கல்விக்கான ஏற்றுமதி எனச் சொல்லப்படுகின்றது. சீனாவிலிருந்தோ அல்லது இந்தியாவிலிருந்தோ ஒரு மாணவன் கனடா வந்து மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் கல்வி கற்ற பின்னர் அவனுக்கு இங்கு தொழில் வாய்ப்பு கிடைத்து நிரந்தர வதிவிடவுரிமை கிடைக்கும்வரை அவன் கனடாவில் செலவிடும் செலவுகளான கல்விக் கட்டணம், வாடகை, உணவு, உடை, போக்குவரத்து, பொழுதுபோக்கு செலவு அனைத்தும் அந்த மாணவனின் கல்விக்கான ஏற்றுமதி வருமானமாக கனடாவுக்குக் கிடைக்கின்றது.

இதன் முக்கிய விடயம் என்னவெனில், எல்லா வெளிநாட்டு மாணவர்களும் இங்கு தங்குவதில்லை. இவர்கள் தத்தமது நாடுகளுக்கு சென்று உயர்பதவி வகிக்கும்போதோ அல்லது இலகுவாக தொழில் வாய்ப்பைப் பெறும்போது இதன்மூலம் மேலும் தொடர்ச்சியாக வெளிநாட்டு மாணவர்களின் வருகை அதிகரித்துச் செல்வதாக கூறப்படுகின்றது.

2010ம் ஆண்டு 218,200 வெளிநாட்டு மாணவர்கள் மூலம் கனடா 6.9 பில்லியன் (billion) டாலர்களை வருமானமாகப் பெற்றுள்ளது. இதன் மூலம் 81,000 புதிய தொழில் வாய்ப்புகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் உருவாக்கப்பட்டதாக புள்ளிவிபரம் கூறுகின்றது. இதில் 445 மில்லியன் (million) டாலர்கள் அரசாங்கத்திற்கு நேரடி வருமானமாக கிடைத்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து படிக்கவரும் மாணவர்களில் சீனா, தென் கொரியா, இந்தியா முறையே முதல் மூன்று இடங்களையும் பிடித்துள்ளன. ஏனைய நாடுகளாக சவூதி அரேபியா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் மெக்சிக்கோ, ஹொங் கொங், தாய்வான் போன்றவற்றை குறிப்பிடலாம்.

21ம் நூற்றாண்டின் புதிய பொருளாதார ஒழுங்கில் (New Economic Order) கல்வியின் மூலமான பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தினை உணர்வதற்கு இக்கட்டுரை சிறிதளவேனும் உதவி புரிந்திருக்கும் என நம்புகிறேன்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்

**S.P. Importers**



**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

**TAMILSYELLOWPAGES.COM**

பிறந்த நாள் முதல்
இறந்த நாள் வரை
உங்கள்
அனைத்துச்
சேவைகளையும்
பூர்த்தி
செய்வதற்கும்

உங்கள்
அன்றாட
வாழ்க்கைக்குத்
தேவையான
தொப்பி முதல்
பாதஅணிவரை
அனைத்துத்
தரமான
பொருட்களை
குறைந்த
விலையிலும்,
துரிதமாகவும்
பெற்றுக்கொள்ள
நீங்கள்
நாடவேண்டிய
வர்த்தக
**WEB SITE**

Mobile: 416-752-4444
Tel: 416-644-7273
E-mail: tamilyp@gmail.com

**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற

சிவா
கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவாகவே..

ஒரு மேடை நிகழ்வு நல்லது என்று முடிவு செய்வதற்கு அந்த நாடகத்தில் தோன்றக்கூடிய அதிமுக்கியமான பாத்திரங்களை மட்டும் பார்த்தால் போதாது. ஆகக் கடைசியான பாத்திரம் எப்படி நடித்தது என்பதையும் பார்க்கவேண்டும். உதாரணத்துக்கு காவல்காரர்களாக வந்த இருவர். வாளைப் பிடித்துக்கொண்டு ஆடாது அசையாது நேராக நிற்கவேண்டும். அத்துடன் முகத்தை கல்போல ஓர் உணர்ச்சியும் காட்டாமல் வைத்திருப்பதும் அவசியம். அதை காவல்காரர்கள் நேர்த்தியாக செய்தார்கள். கதாநாயகி ஞானத்தின் தோழியாக வந்த பெண். அவருக்கு வசனமே இல்லை. கதாநாயகியின் பின் செல்வதுதான் அவர் வேலை. இருந்தும் கண்களாலும், கைகளாலும், உடல் அசைவுகளாலும் தன் இருப்பை முக்கிய பாத்திரமாக்கி சபையோரின் கவனத்தை ஈர்த்துவிட்டார். நெறியாளரின் நுணுக்கமான கவனிப்பு சிறுசிறு பாத்திரங்களையும் மெருகேற்றிவிட்டது.

'இந்த நாட்டுக்கூத்தின் வெற்றியின் ரகஸ்யம் என்ன?' என்று இசைத்தென்றல் ம.ஜேசுதாசனிடம் கேட்டபோது அவர் சொன்னார். 'வடமோடி நாட்டுக்கூத்தில் ஆட்டத்திற்குத்தான் முக்கிய இடம் ஆனால் தென்மோடி நாட்டுக்கூத்தில் இசைதான் அதன் ஆதாரம். ஆகவே எல்லா நடிகர்களுக்கும் ஆரம்பத்தில் இருந்தே இசையில் பயிற்சி அளிக்கப்பட்டது. இசை அறிவுக்கு ஏற்றமாதிரி பாத்திரங்களும் வழங்கப்பட்டன. இதில் ரகஸ்யம் ஒன்றுமில்லை. ராகசுத்தம், சுருதி, தாளம் அவ்வளவுதான். குரல் பயிற்சிக்குத்தான் முதலிடம். அதுசரிவந்தால் கூத்து சரிவருகிறது என அர்த்தம்.'

நாட்டுக்கூத்தில் முக்கியமான அங்கம் பிற்பாட்டுக்காரர்கள். சில கூத்துக்களில் பிற்பாட்டுக்காரர்களே பாட்டுகளைப் பாடுவார்கள்.

இந்தக் கூத்தின் வெற்றிக்கு காரணம் பிரபலமான அண்ணாவியார் ம.ஜேசுதாசன் நெறியாள்கை செய்தது. அத்துடன் நாடகப் பாத்திரங்கள் பாடும்போது குறுக்கிடாமல் பிற்பாட்டாக வந்து இணைந்து சுருதி, தாளம் தவறாமல் நடிகர்களை அணைத்துக்கொண்டு போனதுதான். ஜேசுதாசன் கீபோர்டில் வாசிக்க அவருக்கு பக்க பலமாக இருந்தவர்கள் அன்ரன் சுவகீன்பிள்ளை, ஜுட் நிக்கொலஸ், கலாசினி பரமநாதன், மனுவல் ஜேசுதாசன் டோலக் ஜெகதீஸ் மற்றும் தபேலா டின்சன் வன்னியசிங்கம். நாட்டுக்கூத்தின் ஒவ்வொரு தனித்தனிக் காட்சியை இணைக்கவும், விறுவிறுப்பைக் கூட்டவும் கீபோர்ட் இசையும் பிற்பாட்டும் பெரிதும் உறுதுணையாக அமைந்திருந்தன.

இந்தக் கூத்தை தயாரித்தது எஸ்.ஜே.வி. ஆனந்தன். பாரம்பரியமான கூத்துக்கலையை அதன் ஆத்மா கெடாமல் நவீன தொழில்நுட்பத்தால் மேம்படுத்தியிருந்தார். மேடையமைப்பு, உடையலங்காரம், ஒப்பனை ஆகியவற்றை தனியொருவராக பொறுப்பேற்று சிறப்பாகச் செய்து முடித்திருப்பது இவருடைய சாதனை. இந்த நாட்டுக்கூத்தின் மூலம் திரட்டப்பட்ட நிதி கனடா சன்னிபுருக் மருத்துவ நிலையத்தின் கான்சர் பிரிவுக்கு வழங்கப்படுகிறது.

இது கனடாவுக்கு புலம்பெயர்ந்த ஒவ்வொரு தமிழரையும் பெருமையுற வைக்கும் செயல். பாரம்பரியமான தென்மோடி நாட்டுக்கூத்து கலையை மேலும் வளர்த்தெடுத்து இன்னும் பல மேடையேற்றங்களை ஆனந்தன் செய்வார் என நாம் எதிர்பார்க்கலாம்.

நன்றி - தென்றல் ●


**madd Campaign 911**

மதுசாரம் அல்லது போதைப் பொருட்களால் போதையேறியிருந்தால் வாகனம் ஓட்டாதீர்கள்.

அதற்கென தனியான ஒரு சாரதியை ஒழுங்கு செய்துகொள்ளுங்கள்.

வாடகை கார் (taxi) ஒன்றை அழையுங்கள்.

இரவு தங்கிவிடுங்கள்.

சாரதியொருவர் குடிபோதையில் வாகனம் ஓட்டுவதாக நீங்கள் சந்தேகித்தால் உடனடியாக 911ஐ அழையுங்கள்.

madd Toronto

தொலைபேசி: 416-924-2666
மின் அஞ்சல் முகவரி: info@madd.ca
இணையம்: maddtoronto.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**AB LEGAL SERVICES**
Professional Corporation

**Kauvsegan.E**
Accident Benefit Specialist

**204-80 Corporate Drive, Toronto, ON. M1H 3G5**
**Tel: 416 290 6200 Fax: 416 290 6201**
email: info@ablegalspc.com
www.ablegalspc.com



ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை





அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**
628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரும்பசிட்டி
ஐயாத்துரை
ஜெகதீஸ்வரன்

மணி விழா
08.10.2010 திங்கள்
மாலை 5.30 மணி.
பபா மண
மண்டபம்
3300 மக் நிக்கோல்
வீதி ஸ்காரப்ரோ
416 321 8614/905 230 1221/416 208 9208.

குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழும் சமூகப் பற்றாளன். **பேராசிரியர் பாலசுந்தரம்**

இந்த சிந்தனைச் சிற்பி நீண்டகாலம் வாழ்ந்து இக்கனேடிய மண்ணில் எம்மவர்க்குத் தொடர்ந்து வழிகாட்டும் முன்னோடியாக வளம்தர வேண்டுமென்று வாழ்த்துகின்றேன். **பேராசிரியர் யோசப் சந்திரகாந்தன்**

நிறைவான உங்கள் வாழ்வு...இன்னும்குறையின்றி நீண்டு நடக்க...இறைவனை வேண்டி நெஞ்சார வாழ்த்துகிறேன்...! **கோதை அமுதன்.**

அக்கறைமிக்க மனித உரிமை ஆர்வலர், நேர்மையான விமர்சகர், முற்போக்கு சிந்தனையாளர், தமிழ் மொழி, சமயம், கல்வி, கலை, பண்பாடு போன்றவற்றின் ஏற்றத்திலும் எழுச்சியிலும் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் பற்றும் கொண்ட சமூக மேம்பாட்டுச் சிந்தனைமிக்க ஒருவர். **துயின்ஸ் துரைசிங்கம்**

முகத்தில் எந்நேரமும் தவழும் புன்னகை, தார்மீகத்திற்காக குருதிசிந்தும் முகபாவம், நகைச்சுவைக்காக வாயைத் திறந்த வெடிச்சிரிப்பினை உதிர்க்கும் களங்கமற்ற முகபாவம், அவரது அடையாளச் சின்னங்கள். **சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன்**


மணிவிழா காணும் இனிய நண்பர் ஜெகதீஸ்வரனின் சமூக, இலக்கிய சேவை மேன்மேலும் தொடரவேண்டும். **குரு அரவிந்தன்**

மிக அமைதியானவர் உரக்க சத்தமிட்டு பேசி நான் கண்டதில்லை. தானாகவே வந்து உதவி செய்யும் பண்பாளர். கருத்துக்களில் தீர்க்கமான உறுதி கொண்டவர். அதை வலியுறுத்துவார். முடிவு தனது மனதுக்கு உவப்பில்லா விட்டாலும் பெரும்பான்மைக் கருத்தோடு ஒத்தோடுகின்ற ஜனநாயகப் பண்பாளர். **கவிஞர் திருமாவளவன்.**

சிந்தனையாற் சீரியநல் எழுத்தாற் பேச்சாற்சிறந்தஅருங் கலைஞுனென் நெஞ்சில் நிற்போன் **அனலை ஆ. இராசேந்திரம்**

அகவை அறுபதை எட்டிய அன்பு நண்பர் ஜெகதீஸ்வரனுக்கு எனது அகம் கனிந்த வாழ்த்துக்கள்! **நான்காவது பரிமாணம் க. நவம்**

CGA
THE NAME YOU NEED FOR YOUR BUSINESS



Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com

NIMAL VINAYAGAMOORTHY
Certified General Accountant

2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விண்டோஸ் 8' இந்த மாதம் 26ஆம் திகதி வெளியாகிறது

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் விண்டோஸ் 8 இயங்குதளம் பொதுமக்களுக்கு இந்த (ஒக்டோபர்) மாதம் 26ஆம் திகதி வழங்கப்படும் என மைக்ரோசாப்ட் அறிவித்துள்ளது.

மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு கணணிகளைத் தயாரித்து வழங்கும் நிறுவனங்கள், தங்கள் கணணிகளில் இதனை பதிந்தே விற்கும். எனவே ஒரு விண்டோஸ் 8 சிஸ்டம் காப்பி, அது பதியப்படும் மதர் போர்டுடன் மட்டுமே செயல்படும். அதனை மற்ற மதர்போர்டு உள்ள கணணிக்கு மாற்ற முடியாது. எனவே இன்னொரு புதிய பெர்சனல் கம்ப்யூட்டருக்கு மாற வேண்டும் என எண்ணினால், புதிய விண்டோஸ் 8 ஒன்று வாங்க வேண்டியதிருக்கும்.

ஏற்கனவே உள்ள இயங்குதளங்களை, விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கு அப்கிரேட் செய்திட விரும்புபவர்களுக்கு, அதற்கான கட்டணமாக 40 டொலர் செலுத்திய பின்னர் உரிமம் வழங்கப்படும். மூன்று வாரங்களுக்கு முன்னர், ஒக்டோபர் இறுதியில் வெளியிடப்படும் என நாள் குறிக்காமல், மைக்ரோசாப்ட் அறிவித்திருந்தது.

இப்போது சரியாக என்று கிடைக்கும் என தன் திட்டத்தினை வெளியிட்டுள்ளது. மைக்ரோசாப்ட் நிறுவனத்தைப் பொறுத்தவரை, விண்டோஸ் 8 இயங்குதளம் அதன் வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தினை உண்டாக்கப் போகிறது. முதல் முறையாக இரு வேறு வகை கணினி சாதனங்களில் இயங்கும் வகையில் ஓர் இயங்குதளத்தினை மைக்ரோசாப்ட் வழங்க இருக்கிறது.

டெஸ்க்டாப் மற்றும் டேப்ள்ட் பிசி மட்டுமின்றி, விண்டோஸ் போனிலும் இது இயங்கும். மைக்ரோசாப்ட் அறிவித்த சர்பேஸ் டேப்லட் பிசியும் இதனுடன் சேர்ந்து வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.

2011ஆம் ஆண்டில் நுகர்வோருக்கான எலக்ட்ரானிக்ஸ் சாதனங்களுக்கான கண்காட்சியில், விண்டோஸ் 8 குறித்த திட்டவரைவை மைக்ரோசாப்ட் வெளியிட்டது.

சிப் ஒன்றில் இது சிஸ்டமாகக் கிடைக்கும் எனக் கூறிய போது, அனைவரும் கவனிக்கத் தொடங்கினர். அடுத்து ஜுன் 1, 2011 அன்று கம்ப்யூட்டக்ஸ் 2011ஆம் ஆண்டில் அதிகாரபூர்வமாக அறிவிப்பு வெளியானது.

அன்று அறிவிக்கப்பட்ட விண்டோஸ் மெட்ரோ இன்டர்பேஸ், மக்களிடையே ஆர்வத்தைத் தூண்டியது. அதே நேரத்தில் பழையவகை விண்டோஸ் திரையும் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டது.

விண்டோஸ் 7 சிஸ்டத்தைக் காட்டிலும் அதிவேகமாக விண்டோஸ் 8 பூட் ஆகும், யு.எஸ்.பி. 3 கிடைக்கும், விண்டோஸ் ஸ்டோருக்கான இணைப்பு தரப்படும்.

யு.எஸ்.பி. ட்ரைவிலிருந்து விண்டோஸ் இயக்கலாம் என்ற புதிய தகவல்கள் கணணி பயன்படுத்துபவர்களிடையே அதிக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி வருகின்றன.


ஆடலகம்

**Aadalaham Dance Academy**

றொறன்ரோ (டவுண்ரவுண்), ஸ்காபரோ, மார்க்கம் நகரங்களில்
பரதநாட்டிய வகுப்புகள் நடைபெறுகின்றன.



**அனோஜினி குமாரதாசன்** பி.ஏ.(நடனம்)
அண்ணாமலை பல்கலைக்கழக கனடா வளாகம்


**Anojini Kumaradasan** B.A.(Dance)
Annamalai University Canada Campus

Bharathanatyam classes at the following locations:
Toronto (Downtown), Scarborough, Markham

416 968 5975    416 710 5975





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org